உ

# ஆத்மஜோதி ஞானம்

அறம் உ                உண்மையே கடவுள்                சிந்தனை ௫

சாதி, சமய, இன வேற்றுமையற்ற
ஆத்ம சிந்தனைச் சஞ்சிகை.

ஐப்பசி — கார்த்திகை — மார்கழி — 1993

திருவளரின் சிந்தனைத் தொகுப்புக்களும்
பிற ஆக்கங்களும்.

விநாயகர் தர்ம நிதிய இலவச வெளியீடு.

★ உடனுழைப்பு — சிக்கனம் — சமத்துவம் ★

பிரதிகள்: 1960    பக்கங்கள்: 46    முடிவுவிலை: 11/05

ஸ்ரீ —



# சமர்ப்பணம்

இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தங்கள்சக்தியை எந்நேரமும் உதவிக் கொண்டிருக்கும் ஐந்து பூதங்களான காற்று, தீ, நீர், நிலம், ஆகாயம் இவற்றிற்கும், எம்மை உருவாக்கிய தந்தை, தாய், குரு முத வானோருக்கும், நாம் வாழ உணவு அளித்துக் கொண்டிருக்கும் தாவர வர்க்கம் முதல் மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும் எமது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதாரீகமலங்கட்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகிறோம்.

28 - 11 - 93

— நிறுவனர்.

## இதழின் உள்ளே...


★ அறத் தமிழ் ஞான சிந்தனைகள்
★ ஓர் இளம் எழுத்தாளனின் நாட்குறிப்பிலிருந்து
★ பிள்ளையார்கதை புராணத்திலுள்ள 5 பூதக்கூற்றின் தத்துவ விளக்கம்
★ ஐந்துவித அணுஎண்ணிக்கைகள் கூடிக் குறைவதன் காரணம்
★ நீண்ட ஆயுளின் பரம இரகசியம் என்ன?
★ பூமி ஒன்றே அதனைக் காப்போம்
★ எமது பெரும் வீடாகிய பூமியின் வாழ்வும் எதிர்காலமும் ஆபத்தில்
★ நம்பிக்கையும் முயற்சியும்
★ சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மரங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன
★ உனக்கும் எனக்கும்
★ வாந்திபேதி — (கொலரா)
★ ஐந்துவித அணுக்கூறுகளும் அவற்றின் செயற்பாடுகளும்
★ பகுத்தறிவு மனிதனின் பரிணாம வளர்ச்சி.




ஸ்ரீ —

# அறத்தமிழ் ஞான சிந்தனைகள்

எமது அறத்தமிழ் ஞானம் ஆடி, ஆவணி இதழ் 93-ல் யப்பானைப்பற்றி எமது எண்ணத்தை வெளியிட்ட சில கிழமைகளில் எமது எண்ணத்தை ஒத்த வகையிலே யப்பானியப் பிரதமர் வேறு எந்த நாடுகளும் கேளாமலே உண்மை நிலையை எடுத்துக் கூறி தமது நாடு உலக சமுதாயத்திற்கு இழைத்த கொடுமைகளுக்காக பகிரங்க மன்னிப்புக்கோரி எந்த நாடும் செய்யாத செய்ய முடியாத அறநெறிக்கோட்பாட்டைக் கட்டி எழுப்பி, உண்மைக்கு உயிரூட்டி உயர வைத்து விட்டார். அவர்களது மனமாற்றமும் உண்மையை மதிக்கும் தன்மையும் நாம் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய முன் உதாரணங்களாகும். யப்பானின் இவ்வகையான செயற்பாடுகள் தான் அவர்களது ஒளி அணுவில் மாற்றத்தை உண்டுபண்ணி பொருளாதாரத்தை உயர்வடையச் செய்தது. எமது எல்லா இதழ்களிலும் எமது கோட்பாடாக உடலுழைப்பையே முதலாக உணர்த்தி வந்துள்ளோம். யப்பானின் வரலாற்றை எடுத்துப் பார்க்கும் போது எமது கோட்பாட்டின் உயர்வை சகலரும் உற்றுணர ஏதுவாக அமைந்துள்ளது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்வதோடு உண்மைக்கும் உடலுழைப்பிற்கும் மதிப்பளித்து உயர்வடையுமாறு அன்பாகவும், பண்பாகவும், பணிவாகவும் இருகரம் கூப்பி வேண்டுகின்றோம்.

இவைபோல் எமது முன்னைய வெளியீடான அறத்தமிழ் ஞான சிந்தனையில் 'அறம்' 'தமிழ்' 'ஞானம்' என்று பிரித்து இவைகளை எமது சமயசம்பந்தமான வரலாறுகளுடன் இணைத்து விளக்கியிருந்தோம், இதன் பிற்பாடு யப்பான்தேச வரலாற்றை எடுத்துக் காட்டியிருந்தோம். இன்று அதற்குரிய முழு விபரங்களையும் தர முன் வந்துள்ளோம். இரண்டாம் உலக யுத்தத்தில் அணுக்குண்டின் தாக்கத்தால் அழிந்துபோன யப்பான் எவ்வாறு எல்லா நாட்டிற்கும் மேலாக வளரமுடிந்தது என்பதை ஆராயும்போது பலவித உண்மை வரலாறுகள் தெரிய வருகின்றது.

அவர்கள் தமது தேசம் அழிந்ததும் மற்றவர்களைப் போல் சமயகைங்கரியம், நேர்த்திக்கடன் எவைகளையும் மேற்கொள்ளவில்லை.

தொழிலைத் தவிர வேறுஒரு தெய்வம் இருப்பதென்பதை அவர்கள் ஒரு அணுவளவும் நம்பவில்லை. தேவை இல்லாத களியாட்டங்களிலோ பகட்டு வாழ்க்கையிலோ நேரத்தைச் செலவிடவில்லை. தமது சூக்கும தேக சேமிப்பில் சேவை செய்ய வேண்டும் என்ற சிந்தனையை வளர்த்துக் கொண்டார்கள்.

இவ்வகையான சிந்தனை வளர்ந்ததும் ஞான அணுக்கள் விருத்தியடைய இடம் ஏற்பட்டது. இவ்வாறான ஒளியணுக்கள் கூடியதும்; தம்நாடு வளர வேண்டும், தம் நாட்டுமக்கள் வளரவேண்டும், மொழி வாழ வேண்டும், அதற்காக நாம் என்ன செய்யவேண்டுமென்ற சிந்தனையை வளர்க்கலாயினர். இவ்வகைச் சிந்தனை வளர்ச்சி காரணமாக சூழலைச் சுத்தமாக வைத்திருக்கும் ஆற்றலைக் கிரகித்துக் கொண்டார்கள். அவர்களிடம் அமைந்த சூட்டணு காரணமாக காற்று சுத்தம் அடைந்ததும், அவர்களது சிந்தனைகள் விசாலமான எண்ணங்களையே சிந்திக்கத் தலைப்பட்டன. அவர்களது மனதில் அதிகார ஆசைகள், பொருளாசைகள், மண் ஆசைகள் போன்றனவற்றுக்குரிய நீர்அணுக்கூறுகள் குறைவுபடலாயின. இவ்வகையான அறநெறிச் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக தொழிலைத் தெய்வமாக வணங்கிக் கொண்டார்கள். தொழிலைத் தெய்வமெனப் போற்றியமையினால் மற்றவரிடம் கையேந்தும் நிலையை அவர்களது மனநிலை தமது வளர்ச்சிப் பாதைக்கு தடைக்கற்கள் என உணர்த்திக் கொண்டது.

உயிர்போகும் நிலையிலும் அடுத்தவர் பரிதாபப்பட்டுக் கொடுத்தாலும் கையேந்தக் கூடாதென்ற மனநிலையை ஆக்கிக் கொண்டார்கள். தனது காலிலே நின்று தன்கையே தனக்குதவி என்ற தாரக மந்திரத்தை மந்திரமாகக் கொண்டு தமது வளர்ச்சிப் பாதையை நோக்கி தம் நாட்டைக்கட்டி எழுப்பலாயினர். தமக்குத் தேவையான பொருட்களைத் தாமே வடிவமைத்தார்கள் – உற்பத்தி செய்தார்கள் – உருவாக்கினார்கள் – தொழில் வளத்தைப் பெருக்கினார்கள். தொழில் வளம் பெருகியதால் பணம் மலைபோல் குவியலாயின. இவ்வளவு தொகைப் பணத்தை அவர்கள் என்ன செய்வது என்பது அவர்களுக்கே விளங்கவில்லை. பணம் ஏராளமாக குவிந்த தன்மையினால் – புதிய முறையில் வீதிகள் – பாலங்கள் – நாட்டு அபிவிருத்திகளுக்கான திட்டங்கள் எனப் பலவகைப்பட்ட வசதிகளை ஏற்படுத்திக் கொண்டார்கள்.



அழிவினால் பொருளாதாரவளம் குன்றியிருந்த இந்நாடு பொருளாதாரவளம் கூடியதும் எந்த நாடும் உதவியென வேண்டியபோது அந்நாட்டுக்குத் தேவையான உதவிகளை மனத்திருப்தியுடன் வழங்கி வருவதை நாம் காணுகின்றோம். இவ்வகையான உயர்ந்த சேவையினால் அவர்களது ஐந்துவித அணுக்கூறுகள் ஞான நிலைக்கு போகக் கூடிய தன்மையில் பலவித விஞ்ஞானப் பொருட்களை உருவாக்கும் சக்தியையும் பெற்றுள்ளார்கள்.

எந்த ஒரு நாடும் தான் செய்த பிழையை ஒத்துக் கொள்வது கிடையாது. இவர்கள் செய்த பிழையை ஒப்புக் கொள்ளுமாறு வேறு நாடு கேட்டதும் கிடையாது. அப்படித்தான் ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டதினால் எதுவித இலாபமும் இந்நாடு அடைய போவதும் இல்லை என்பதும் தெரிந்த விடயந்தான். இவ்வாறான நிலையில் எமது சமய வரலாற்றிலுள்ள ஞானிகளின் செயற்பாடுகளுக்கு ஒத்த முறையில் இரண்டாம் மகாயுத்த காலத்தில் தமது இராணுவம் செய்த தவறுகளுக்காக உண்மைக்கு முதலிடம் கொடுத்து பகிரங்க மன்னிப்புக்கோரியது நினைத்துப் பார்க்க முடியாத உயர்ந்த செயல் என்றால் மிகையாகாது. வேறு எவருமே செய்ய முடியாத உயர்ந்த செயலை அவர்கள் செய்ததின் காரணமாக அங்கே உள்ள மக்கள் எல்லாம் ஞானவழியில் பிறப்பை நீக்கவே போகின்றார்கள்.

நினைத்துப் பார்க்க முடியாத பல கண்டுபிடிப்புக்களை எல்லாம் கண்டுபிடித்து வளர்ந்து – உயர்ந்து உலகிலே நிமிர்ந்து நிற்கும் யப்பான் சிறிது காலத்திற்கு முன்னர் எழுபதினாயிரம் மக்கள் வாழக்கூடிய புதிய நகரம் ஒன்றையே கடலினுள் அமைத்து சாதனை படைத்தது யாவரும் அறிந்த விடயமாகும். இன்று அதைவிட ஒருபடி மேலேறி வெளிச்சம் இல்லாமலே ஒருவர் தனது புத்தகத்தை வாசிக்கக் கூடிய மூக்குக் கண்ணாடியைக் கண்டு பிடித்துள்ளார்கள். பக்கத்தில் உள்ளவர்கள் எவருக்குமே இவ்வெளிச்சம் தெரியப்போவதில்லை. இவ்வகையான புதிய புதிய கண்டுபிடிப்புக்களை நாளும் பொழுதும் உருவாக்கிய வண்ணமே உள்ளனர். அவர்கள் தமது தொழிலை பணத்தை உழைப்பதற்காக மட்டும் செய்யவில்லை. தம்நாடு வளர வேண்டும், மொழி வளரவேண்டும், தம் நாட்டுமக்களின் சேவை மனப்பான்மை உயர வேண்டும் என்ற விரிந்த விசாலமான எண்ணத்துடன் செயற்படுவதினால் வளம் கொழிக்கும் நாடாய் சிறப்பாக நிமிர்ந்து நிற்கின்றது.

இவ்வகையான வெற்றிகளுக்கெல்லாம் மூலகாரணம் இவர்களது சிந்தனையில் ஒளியணுக்கள் கூடியமையேயாகும். அதிகாரத்திற்கும் ஆசைக்கும் அவர்கள் அடிமைப்பட்டிருந்தால் நீர் அணுப் பெருகி இன்றுள்ள உயர்வை அவர்களால் அடைந்திருக்க முடியாது.

எமது அறத்தமிழ் ஈழத்திலும் தொழிலைத் தெய்வமாகப் போற்றும் மனப்பான்மை வளர்ந்து கிரகிக்கும் ஆற்றல் வளருமானால் மக்கள் யாவரும் ஞானவழியில் பிறவா நிலையை அடைவார்கள் என்பது மிகமிக உறுதியாகும். தொழிலே தெய்வம் எனப்போன்றும் அணுக்கூறுகள் மக்களிடம் பெருகுமானால் அந்நாடு மிகமிக குறுகிய காலத்தினுள் (10 வருடங்களில்) எவருமே நினைத்துப் பார்க்க முடியாத எவரிடமும் கையேந்தாத தரும சிந்தனை உள்ள நாடாக வளர முடியும் என்பதை உறுதியுடன் நம்புகின்றோம்.

ஒளியணு இல்லாத அதிகார ஆசையும் ஆணவத் தன்மையும் மலிந்த எந்த ஒரு நாடும் வீழ்ச்சியடையும் என்பது திண்ணம் என்பதை சூரசங்காரம் நடைபெறும் இந்நாளில் நினைவு கூருவது நல்லது. சூரசங்காரம் போன்ற சமய விழாக்கள் யப்பான் நாட்டிற்குத் தேவையற்றதொன்றாகும். ஏனெனில் இவை ஆசைகள் – அதிகாரப் போட்டிகள் பொறாமைகள் இல்லாமல் ஞான வழியில் தன் பணியைத் தொடரும் நாட்டுக்கு தேவையற்ற ஒன்றென்றால் மிகையல்ல. நாமும் முன்னுதாரணமாகத் திகழும் யப்பான் நாட்டைப் பின்பற்றி தொழில் வனத்தில் வளர்ந்து ஒளி அணுவைப் பெருக்கி தொழிலை தெய்வமாக மதிக்கப் பழகி எம் வாழ்வை உயர்த்தி புதிய வரலாறை எழுத வேண்டுமென்று பண்போடும் பணிவோடும் அன்போடும் இருகரம் கூப்பி வேண்டுகின்றோம்.

21-11-93 — திருவனர் —



ஊ —

# ஓர் இளம் எழுத்தாளனின் நாட்குறிப்பிலிருந்து

— சுபா —

கடந்த சில வருடங்களாக பலவித இலவச வெளியீடுகளை வெளியிட்டுவரும் விநாயகர் தரும நிதியத்தினர் சில நாட்களின் முன் எமது இலக்கிய வட்டத்திற்கு சில வெளியீடுகளை அனுப்பியிருந்தனர். எமது இலக்கிய முயற்சிகளிற்கு உறுதுணையாக அமையக் கூடிய ஒரு நிதியம் என்ற வகையிலும், பலவித சமுகப்பணிகளை போதியளவு மேற்கொண்டுவரும் நிதியம் என்ற வகையிலும் அங்கு ஒரு ''பார்வையை'' வீச விரைந்திருந்தேன்.

– சுபா – (கரவை கலை இலக்கிய வட்டம்.)

பருத்திநகர் விரைந்து அங்கு எனது நண்பர் ஒருவரின் வழிகாட்டலில் குறிப்பிட்ட தரும நிதியம் அமைந்திருக்கும் பகுதியை அடைந்தேன். எனது எதிர்பார்ப்புகள் பல இந்த தரிசனத்தில் சிதைந்தன. முதலில் அந்த வெள்ளைப் பூச்சுப்பூசிய கட்டிடத்தை பலமுறை தாண்டிச்சென்று தரும நிதியம் எங்கே என்று வினவினேன். காரணம் அடக்கமாக ஆடம்பரமற்று ஒரு பெயர்ப்பலகை நிதியக் கட்டடத்தை இனங்காட்டி நின்றது. எனது எதிர்பார்ப்போ பல வர்ணங்களில், பல மடங்கு பெரிதாக பெயர்ப்பலகை இருக்குமென நினைத்தேன்.

கட்டடத்தை இனம் கண்டு மோட்டார் சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு புழுங்கல் வாடை வீசும் அதனுள் பிரவேசித்தேன்.

## திருவனரைப் பற்றிய சில தவறான எண்ணங்கள்.

நண்பர் ஒருவர் கையில் அரிசிப்பையுடன் எதிர்ப்பட்டார். அவர் ஓர் இலக்கிய அன்பர்.

எனக்குப் பின்வருமாறு கூறினார். ''என்ன ஐயாவை (நிறுவனரை)ச் சந்திக்கவோ. நல்ல காலம், மோட்டச்சைக்கிளை அவற்றை கண்ணிலை படாமல் வெளியாலை விட்டது. கண்டால் துலைஞ்சுது'' ''ஏன் நான் என்ரை சுயவிருப்பம்... என இழுத்தேன். ''இல்லை, அவர் எவ்வளவோ சொத்திருந்தும் தனக்கெண்டு சைக்கிள் கூட இல்லாமல் சேவை செய்யிறார்; நீரோ ஒரு எழுத்தாளர், சமுகப்பணிக்குரியவர், உம்மை உப்பிடியே கண்டால்...'' ''சரி இலக்கிய வட்டத்திலை இருந்து கடிதம் கொண்டு வாறீரோ, அப்பிடியெண்டால் தவறாமல் கடிதத்திற்கு மேலே பிள்ளையார்சுழி போடும்'' ''எங்கட இலக்கிய வட்டத்திலை பலரும், அதாவது கிறீஸ்தவ மதத்தினரும் இருக்கினம். அப்படியிருக்க என்னெண்டு நான் அதைப்போட முடியும்.'' ''ஏதோ இனி உம்மடை விரும்பம்'' நண்பர் விடை பெற்றார்.

மெதுவாக உள்ளே நுழைந்தேன். எப்போதும் கூடவே ஒட்டிக் கொண்டிருக்கும் 'பீ, பீ' பாக் (pp)ஐ கழற்றி வைப்பதற்காக காவலாளிகளின் அறையைத் தேடினேன். அப்படி எதுவுமே இருக்கவில்லை. என்ன ஒரே குழப்பம். பல லட்சம் ரூபாக்கள், பல சஞ்சிகைகள், பல வித மக்கள் தொடர்புகள் கலக்கும் இந்த நிறுவனத்தில்' எப்படி காவலாளிகள் இல்லாதிருக்கும்.

மேலும் குழப்பத்துடன் நுழைய, உள்ளே நிறுவனர் அழைக்கப்படக்கூடிய பதத்தை நண்பர் மூலமும், பொது ஊகம் மூலமும் தெரிந்து கொண்ட நான் நெல்மூடைகளின் மத்தியில் மேலங்கி (சேட்) அணியாது மடித்துக்கட்டிய பழுப்புநிற வேட்டியோடு நின்ற முதியவரைப்பார்த்துக் கேட்டேன் ''ஐயா ஐயா எங்கே'' என்றேன். அவர் சிரித்தபடி நான் தான் ஐயா, ஐயா'' என்றார். தலை சுற்றியது. என்ன நிதிய நிறுவனர் எனது மனக்கண்ணில், லோங்ஸ், சேட் அணியாது விடடாலும் நஷனல் வேட்டியோடு தானும் காணப்படுவாரே. அவர் சுழல் நாற்காலியில் அமர்ந்திருப்பாரே. பளபளக்கும் மேசை மீது கை வைத்திருப்பாரே. கண்டபடி எவரும் சந்திக்காமல் மனித நந்திகள் தடுத்த வண்ணம் இருக்குமே. வணக்கம் கூறிவிட்டு அருகில் கிடந்த கதிரையில் அமர்ந்து கொண்டேன்.

(மிகுதி அடுத்த இதழ்)





உ —

# பிள்ளையார் கதை

## புராணத்திலுள்ள
## 5 பூதக்கூற்றின்
## தத்துவ விளக்கம்

(அறம் 2 சிந்தனை 3 அறத்தமிழ ஞானம்)

எமது வெளியீட்டில் பிரபஞ்சத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது ஒன்பது கிரகங்களும் ஒன்பது விதமான சக்தியைக் கொண்டுள்ளது என்பதையும் இந்த ஒன்பது சக்தியையும் 5வித பூத அணுக் கூறுகளாக வகுத்துள்ளார்கள் என்பதையும் தெரிவுபடுத்தி இருந்தோம்.

இந்த ஐந்து வித பூத அணுக்களுள் மேற்கூறிய கதையில் வரும் பாத்திரங்களான நான்கையும் எடுத்துக் கொள்வோம்.

| | கடவுள் | செறிவு | தோற்றம் | கிரகங்கள் |
|---|---|---|---|---|
| 1. | சிவபெருமான் | – உண்மைப்பொருள் | – தீ | – சூரியன் |
| 2. | முருகன் | – ஞானப்பொருள் | – ஒளி | – செவ்வாய் |
| 3. | உமாதேவியார் | – சக்திப்பொருள் | – நீர் | – சந்திரன் |
| 4. | திருமால் | – தொழில்பொருள் | – நிலம் | – கேது |

சிவனுக்கு ஞானத்தை உபதேசித்த ஞானப்பொருளான முருகன் இவர்களுக் கிடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் தீயாகிய உண்மைப் பொருளில் இருந்து வெளியேறியமை காரணமாக தீயின் பிரகாசம் குறைகின்றது. திப்பொருளுக்கு ஞானமாகிய ஒளி இல்லாத காரணத்தினால் தான் உண்மைப் பொருளான சிவபெருமான் சக்திப் பொருளான உமாதேவியாரை பொய் நிறைந்த சூதாடலுக்கு வருமாறு அழைக்கின்றார். இவ்விடத்தில் தீயாகிய (சிவன்) உண்மைப் பொருளின் பிரகாசம் குறைந்து காணப்படுகின்றமையினால் சக்திப் பொருள் முழுப்பலத்துடன் விளங்குகின்றது. உண்மையும், சக்தியும் ஒன்றை ஒன்று நம்புவது கிடையாது. அதிகார சக்தியுடையவன் உண்மைக்கு முதலிடம் கொடுப்பதில்லை என்பதை எமது அனுபவ வாயி

லாக அறிந்து கொள்வதோடு உண்மைப் பொருளான சிவன் பொய்யாகிய சூதாட்டத்தில் வெல்லவும் முடியாது என்பதை அறிந்து கொள்ளலாம் மேலும் சிவனாகிய கணவன் சூதாட்டத்திற்கு சக்தியாகிய உமாதேவியாரை அழைத்ததும் தன் கணவனை நம்பாது சூதாட்டத்துக்கு சாட்சியாக தொழில் பொருளாகிய திருமாலை உமாதேவியார் அழைக்கின்றார். ஒளி இல்லாத காரணத்தால்தான் திருமாலும் பொய்ச் சாட்சி சொல்லத் தயங்கவில்லை.

திருமால் பொய்ச் சாட்சி கூறிய காரணத்தினால் அவரது ஐந்து பூதச் சேர்க்கையில் ஒளியணு குறைந்து ஏராளமான மாற்றம் ஏற்படுகின்றது. இந்த மாற்றம் ஏற்பட்டதும் அவரது ஆன்ம அலை கீழ் நிலையை அடைகின்றது. கீழ் நிலை அடைந்த காரணத்தினால் சுயநலமுள்ள குருட்டுப் பாம்பாய்ப் பிறப்பதற்குரிய அணு எண்ணிக்கையாக அவரது ஆன்ம அலை மாற்றமடைகின்றது. ஞானமாகிய ஒளி இல்லாத காரணத்தினால்தான் இவைகள் நடைபெற இடமேற்பட்டது. பாம்பு தனக்கென வீடு கட்டுவதில்லை கறையான் கட்டிய வீட்டில் குடிபுகுந்து கொள்கிறது.

ஞானமாகிய ஒளி வெளியேறாது போயிருந்தால் உண்மைப் பொருளான சிவன் சூதாட்டத்திற்கு உமாதேவியாரை அழைத்திருக்க மாட்டார் சக்திப் பொருளான உமாதேவியாரும் தன்கணவனை நம்பாது சாட்சிக்கு திருமாலை அழைத்திருக்க மாட்டார். தொழில் பொருளான திருமாலும் சுயநலம் மேலோங்கி பொய் கூறியிருக்க மாட்டார் இதிலிருந்து ஞானமாகிய ஒளி இல்லாது போனால் எந்த ஆன்மாவும் மேல்நிலையை அடைய முடியாது என்பது முற்றிலும் சரியானதே என உணரமுடிகிறது.

எந்தக் கடவுளாயிருந்தாலென்ன சிவபெருமானாயிருந்தாலென்ன ஒளியணு இல்லாது போனால் உண்மை வழியில் செயல் பெற முடியாது என்பதும் மனதில் ஒன்றிருக்க வெளியில் வேறொன்றைக் கூறுமிடத்து பாம்பாகவே பிறந்து உழல வேண்டுமென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக விளங்குகின்றது.

ஞான ஒளி இல்லாது போனால் நாம் பிறந்து பிறந்து உழல வேண்டியது தான் ஞான ஒளி கூடினால் மட்டுமே இருள் அகன்று எமது பிறப்பை நீக்கி ஞான ஒளியில் இரண்டறக் கலக்க முடியும்.



திருமால் வரலாறு

நான் பெரியவன், நான் பெரியவன் என்ற தர்க்கத்தில் ஏற்பட்ட அடிமுடி தேடும் வரலாற்றில் பிரமா அன்னப்பட்சியாய் வடிவெடுத்து மேலே பறந்து முடியைக் கண்டதாக பொய் கூறியதும் அவரது ஒருதலை இல்லாமற் போகிறது. அதாவது நாலுதலைக்குரிய ஒளியணுச் சேர்மானம் திடீரென குறைவு பெற்று மூன்று தலைக்குரிய ஒளியணுவே செறிந்துள்ளதால் ஒருதலை இல்லாமற் பேழகிறது.

திருமால் அடியைக் காண்பதற்காக நிலத்தைத் தோண்டிச் செல்கிறார். அதாவது கடும் உடலுழைப்பின் மூலம் நிலத்தைத் தோண்டுகிறார். அடியைக் காண முடியவில்லை. காணவில்லை என உள்ளதைக் கூறுகிறார். எவ்வளவோ சிரமத்தின் பின் உண்மையைச் சொன்ன திருமால் பிள்ளையார் புராண வரலாற்றிலே முகமன் பார்த்து பொய்கூறியதும் ஒருமனிதனுக்கிருக்க வேண்டிய ஒளியணு திடீரென குறைவுபெற்று ஊர்வனவான பாம்பாகப் பிறக்கிறார். அதிலும் கண் உருவாவதற்குரிய ஒளியணு குறைந்து விட்ட தன்மையால் கண் உருவாகவில்லை.

பாம்புப் பிறப்பிலும் குருடாகப் பிறக்கவேண்டி ஏற்பட்ட உண்மையை நாம் உணர முடிகிறது.

இன்றுவரை எவராவது சரியான விளக்கத்தை தராத காரணத்தினால் எமது விளக்கத்தைத் தருகின்றோம்.

மேலதிக விளக்கம் தேவைப்படின் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

— திருவனர்.

௭ —

# ஐந்துவித அணு எண்ணிக்கைகள்

## கூடிக் குறைவதன் காரணம்

ஆறறிவு படைத்த மனித இனத்தின் கிரகிக்கும் ஆற்றல் மூலம் செறிந்த அணு எண்ணிக்கை தன்மைக்கு ஏற்ப பாவ புண்ணியங்களை உணரக் கூடிய ஆற்றல் ஏற்பட்டது. ஓரறிவு தொடக்கம் ஐந்தறிவு மிருக இனம் வரையிலுள்ள உயிரினங்கள் தமது உணவுத் தேவையை மட்டுமே நாடிச் செயற்பெறுவதால் அவற்றின் ஐந்துவித அணுத்தொகைகளில் பாவபுண்ணியத்துக்கான அணுக்கூறு ஏற்பட இடமில்லை. மனிதனுக்கு மட்டும் பகுத்தறிவான ஒரு அறிவு கூடியதால்தான் இப்பாவ புண்ணியத்தை உணரக்கூடிய அணுச்சேர்மானம் உருவானது மனித இனம் பகுத்தறிவை மீறி சுயநலத்தை நாடிய காரணத்தினாலே தான் அவர்களின் அணுத்தொகைகளில் கீழ்நிலை மாற்றம் ஏற்படுகின்றன. தகாத காரியந்தைச் செய்யும் போது அதைப்பாவமென்றும் இரங்கும் மனப்பான்மையான காரியங்களைச் செய்யும்போது அதைப் புண்ணியமென்றும் கூறுவார்கள். ஆனால் இப்பாவ புண்ணியங்கள் எவ்வாறு ஆன்மாவைச் சென்றடைகின்றன என்பதை ஆராயும்போது பல உண்மைகள் வெளிவருகின்றன.

எமது சைவசமய வரலாற்றிலே கஜமுகாசூரன் எலிப்பிறப்பாக மாறியதாக எழுதியுள்ளார்கள். இவ்வாறே சூரபத்மன் சேவலும் மயிலும் ஆனதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். இவற்றின் உண்மை விளக்கத்தை நாம் ஆராயும்போது கஜமுகாசூரன் தேவர்களை வருத்தி கொடுங்கோண்மை செய்த காரணத்தினால் மனிதனுக்கிருக்க வேண்டிய அணுத்தொகை விகிதாசாரம் குறைந்து மூன்றறிவுள்ள ஊர்வனவான எலியாக மாறினான் எனக் குறித்துள்ளார்கள். மனித இனமும் 2, 3, 4, 5 அறிவுள்ள இனமாக வளர்ச்சியடைந்துதான் 6 அறிவுடைய இனமாக வரமுடிந்தது. 6ம் அறிவான பகுத்தறிவுடைய மனிதனானவன் கொடுங்கோன்மையான செயல்மூலம் அவனது சூக்கும தேகத்திலுள்ள 5 வித அணுக்களில் பகுத்தறிவுக்குரிய ஒளி அணுக்கள் ஏராளம் குறைந்த தன்மையினால் 5 அறிவு, 4 அறிவு உயிரினங்களுக்குப் போக



முடியாமல் 3 அறிவுள்ள எலி இனத்திற்குப் போய்ச்சேர வேண்டி ஏற்பட்டது. இவ்வாறே சூரபத்மனும் அளவுக்கு மீறிய கொடுங்கோன்மை செய்த காரணத்தினால் 6 அறிவுக்குரிய 5 வித அணுக்களில் ஒளி அணுக்கள் ஏராளமாய்க் குறைந்ததும் 5 அறிவுள்ள வர்க்கத்திற்குப் போகமுடியாமல் 4 அறிவு வர்க்கமான சேவலும் மயிலுமாக உருவாகினான் என்று கூறப்பெற்றது சரியென உணர முடிகின்றது.

விணைப்பயன் மூலமே பிறப்புக்கள் மேல்நிலையையும், கீழ்நிலையையும் அடைவது நடைபெறுகின்றது. இப்பிறப்புக்களை மாற்றுவதென்பது எக்கடவுளாலும் முடியாத காரியமாகும். ஒவ்வொரு ஆன்மாவும் கொண்ட குணத்தின் மூலம் கிரகிக்கும் ஆற்றலை மேம்படுத்தி செயற்படும்போது அவற்றின் குணநலனுக்கு அமையவே அணுத்தொகைகள் மாறுபாடடைகின்றன.

ஒரு தந்தையிடம் உள்ள குணஇயல்புகள் பிள்ளைக்கும் இருக்கும் என முழுமையாக எதிர்பார்க்க முடியாது. ஒரு தந்தைக்கு இரு புத்திரர்கள் இருந்தால் இருவரும் வெவ்வேறு குணஇயல்புடையவர்களாக இருப்பதையும் நாம் காணமுடிகிறது அவர்கள் தாம்தாம் கொண்டுள்ள அணுக்கூறுக்கேற்பவே கிரகிக்கும்ஆற்றல் ஏற்படுகின்றது. அக்கிரகிக்கும் ஆற்றலுக்கேற்பவே அவர்களின் செயற்பாடுகள் அமைகின்றன. ஒரு தந்தையின் இரு பிள்ளைகளில் ஒரு பிள்ளை கல்வியில் மேம்பாடடைவதையும் மற்றவர் கல்வியில் கீழ்நிலையடைவதையும், ஒருவரின் எழுத்தைப்போல் மற்றவரின் எழுத்து அமையாததையும் நோக்கும்போது அவர்களது கிரகிக்கும் ஆற்றலின் ஏற்றத்தாழ்வுகள் தென்படுகின்றன. ஒருவன் தான் கொண்டுவந்த அணுத்தொகைகளுடன் இவ்வுடல் மூலமாக ஏற்படும் அணுக்களும் சேர்ந்து அவரது கிரகிக்கும் ஆற்றலை உரியமுறையில் உருவாக்குகிறது. தனது சுயநலம் காரணமாக ஒரு மனிதன் இன்னொரு மனிதனைக் கொலை செய்கிறான். கொலைசெய்ததும் அக்கொலையை மறைப்பதற்காக ஏராளமானபொய்களைக் கூறுகிறான். நீதிஸ்தலங்களிலும் பொய்கூறி தண்டத்தினின்றும் தப்புவதற்காக ஏராளமான தப்பான வழிமுறைகளைக்கையாளுகின்றான். இச்செயல்களெல்லாம் அவரது சூக்கும தேகத்திலே ஆசைக்குரிய நீரணுக்களைக் கூட்டுகின்றன. இந்நீரணுக்கள் கூடுவதை இந்த மனிதன் என்ன வெளிவேசமான பிராயச்சித்தம் செய்தும் மாற்ற முடியாது.

அந்நீரணுவைக் குறைக்க வேண்டுமானால் தனது உடலுழைப்பு மூலமே அதனைச் செய்யலாம். உடலுழைப்பின் மூலமே அணுத் தொகை மாற்றமடைகிறது.

மனிதன் மேல்நிலையடைவதற்கு ஒளி அணுக்களே முக்கியமானவை. ஒளி அணுக்கள் மூலமே காற்றணு சுத்தமடைகிறது. நீரணுக்கள் மூலம் காற்று அசுத்தமடைகிறது. காற்று நன்னிலையில் அமையாத காரணத்தினால் சிந்தனைகளும் சூழ்நிலைக்கு ஏற்ப மாறுகின்றது. காற்றணுவை சுத்தம் செய்ய முடியாத நீரணுக்கள் கூடுவதால் அதன் வினைப்பயனாக பாவமான காரியத்தையே நாம் செய்ய வேண்டி ஏற்படுகிறது. ஒளி அணுக்களின் மூலம் காற்று சுத்தமடைந்து மன எண்ணம் நல்லதாக அமைவதால் இவை காரணமாக புண்ணியம் செய்யும் மனநிலையை அடையலாம். எனவே பாவபுண்ணியம் என்பது காற்று சுத்த அசுத்தங்களின் மூலமே உண்டாகின்றது. காற்று சுத்தமாய் அமைந்த சூழலில் உள்ள மனிதரிடம் தான் இரக்க மனப்பான்மை உருவாக முடியும். எமது பிறப்பு பாவமான காரியங்கள் மூலம் கீழ் நிலைப் பிறப்புக்குச் செல்கின்றது. புண்ணியம் என்று சொல்லப்படும் ஒளி அணுக்களைக் கூட்டுவதால் மற்ற அணுக்கள் ( நீரணுக்கள் ) குறைந்து பிறப்பை நீக்கும் செயலுக்கு ஆளாக்குகிறது.

தற்கால சூழ்நிலையிலே பல்வேறுதரப்பட்ட தரவுகள், கணக்குகள் என்பவற்றை இலகுவான முறையில் கையாளக் கூடியதான கணனி எனும் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது. அக்கணனியானது. தேவையான தரவுகளையோ கணக்குகளையோ மிகக் குறைந்த நேரத்தில் சரியான முறையில் செய்யும் ஆற்றல் மிக்கது. இதற்குக் காரணம் அதனுள்ளே பதிவாக்கப்பட்டுள்ள தரவுகளேயாகும். இவ்வாறே எமது சூக்கும தேகத்தில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில் எமது வினைப்பயனால் ஏற்படும் அணுச் செறிவுகள் உடனுக்குடன் பதிவாகின்றது. சதாநேரமும் இவ் அணுச்சேர்க்கைகள் பதிவாகிக் கொண்டே இருக்கின்றன. ஒரு மனிதனின் ஆயுள் முடிவில் அவனது தலைமைச் செயலகத்தில் பதிவாகியுள்ள அணுச் சேர்க்கைகளுக்குரியதானவாறாகவே அவனது மறுபிறப்போ, அல்லது பிறவாமையோ ஏற்படுகின்றது.

நாம் ஒரு கணனியை இயக்குவதற்கோ அல்லது வானொலி, தொலைக்காட்சியினை இயக்குவதற்கோ அதற்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்க வேண்டும். இம்மின்சாரத்தை



வழங்க முடியாதநிலை ஏற்படுகின்றபோது அக்கருவிகளும் இயங்க முடியாது செயலிழக்கின்றன. செயலிழந்த சாதனங்களிற்கு மீளவும் மின்சாரம் வழங்கும்போது அவை சரியான முறையில் செயற்படுகின்றன. இவ்வாறே எமது சூக்கும தேகத்திலுள்ள அணுத்தொகைகளுக்கும் தூல உடலிலுள்ள அணுச்சேர்க்கைக் கணக்குகளுக்கும் இடையே கூடுதலான வித்தியாசமேற்படுமிடத்து சூக்கும தேகத்தை இயக்கிக் கொண்டிருக்கும் உடலானது வலுவிழந்து செயலற்றுப் போகின்றது. சூக்கும தேகத்திலுள்ள அணுச்சேர்க்கையானது (ஆன்மஅலை) தாமதமின்றி தமக்குரிய ஒரு உடலை அடைகின்றது ( மின்சாரம் பெறுதல் ). இதன் மூலமே எமது பிறப்புக்கள் அமைகின்றன. எமது சமய வரலாற்றுச்சான்றுகளிலே கீழ்ப்பிறப்புக்களை அடைந்த வரலாறுகளும் ஞானத்தின் மூலம் மேல்நிலையடைந்த வரலாறுகளும் அநேகம் உண்டு. நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்குமான பலாபலன்கள் உடனுக்குடன் அவ்வவற்றுக்குரிய அணுவாக தலைமையகத்தின் மூலம் சூக்கும தேகத்தில் பதிவாகின்றன.

சிவபெருமான் கூட முப்புரமெரிப்பதற்கு விநாயகனை நினையாத காரணத்தினால் அவர் சென்ற தேரின் அச்சு முறிந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்கள். (முப்புரமெரிப்பதென்பது மூவாசைகளை அழிப்பதையே குறித்து நிற்கின்றது.) சிவபெருமானே முப்புரமெரிக்க விநாயகரின் உதவியை நாடாத காரணத்தால் செயலிழந்த நிலையினை ஆராயுமிடத்து சிவபெருமானான நீப்பொருள் விநாயகரான காற்றுப் பொருளை நினையாமையே குறிப்பிடுகின்றது. சிவபெருமானாகிய உண்மைப் பொருள் பிரகாசிப்பதற்கு காற்று மிக முக்கியமானது என்பதையே மறைமுகமாக இங்கு குறிப்பிட்டுள்ளமையை நாம் உணரக்கூடியதாக உள்ளது. இவ்வாறே நாமும் மூவாசைகளை நீக்கி ஞானத்தை அடைய தூயகாற்று மிகமிக முக்கியமாகும். நற்சிந்தனை ஏற்படுவதற்கு தூயகாற்று முக்கியமானதாகும். நற்சிந்தனைகள் மூலம் காற்று மேலும் மேலும் சுத்தமடையும். காற்று சுத்தமடைந்ததும் ஒளி பிரகாசிக்கின்றது. எமது சமய வரலாற்றிலே ஏராளமான விசயங்கள் இவ்வாறு ஆழ்ந்த தத்துவ நோக்கத்துடன் குறிப்பிடப் பெற்றுள்ளன.

ஞானப்பொருளான முருகன் வள்ளிநாயகியைத் திருமணம் செய்யப் போகும்போது அவளைத் தன்வழிக்குக் கொண்டு வருவதற்காக காற்றுப் பொருளான விநாயகனை வரவழைக்கிறார்.

ஒளியுள்ள இடத்துக்குக் காற்று வந்ததும் அக்காற்றணு சூட்டின் காரணமாக சுத்தமாகி அவ்விடமுள்ளவர்களின் சுவாசத்துக்கு செல்கிறது. அவர்களின் இருதயம் நல்ல காற்றணுவால் செயற்பெறும் போது நற்சிந்தனை உருவாகிறது.

காற்றான விநாயகன் ஒளியான ஞானத்திடம் வந்ததும் வள்ளி நாயகி திருமணம் நிறைவேறுகிறது. இங்கு ஒளியான ஞானப்பொருள் காற்றணுவின் மூலமே ஞானவழியை அடைய முடிந்தமை தெளிவாகின்றது.

சிவபெருமான் (உண்மைப்பொருள்) மாங்கனிக்காக உலகை வலம்வரும் போட்டி வைத்து விநாயகனே முதலில் சுற்றி வந்ததாக மாங்கனியைக் கொடுக்கின்றார். இவ்விடத்திலும் சிவபெருமானது நல்ல தீர்ப்புக்கு திக்குக்கிட்டவுள்ள காற்றணு (விநாயகன்)வே முக்கியமாகச் செயற்பட்டமையை நாம் அறியமுடிகின்றது. இவ்வாறே எமது சமய வரலாறுகள் எல்லாவற்றிலும் விநாயகனை முதன்மையாகக் குறிப்பிட்டுள்ளதன் காரணங்கள் என்ன என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

ள —

# நீண்ட ஆயுளின் பரம இரகசியம் என்ன?

ன்றும் இளமையான தோற்றம், நீண்ட ஆயுள் என்பன இறைவன் கொடுத்த வரமாகும். உலகில் அதிக நாட்கள் வாழ்வதற்கு இஷ்டம் இல்லாத மனிதன் எவரும் இருக்க முடியாது. ஆனால் ஆரோக்கியமான வாழ்வு, நீண்ட ஆயுள் என்பனவற்றிற்கும், பாரம்பரியம் நாளாந்தம் உண்ணும் உணவுப் பொருட்கள் என்பனவற்றிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.



உலகில் அதிக நாட்கள் அதிகமான மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசமாக யப்பானின் டோக்கியோவைச் சேர்ந்த 'யூகுறிஹாரா' புகழ்பெற்று விளங்குகின்றது.

இவர்கள் பெரும்பாலும் மூப்பினால் தளர்ச்சியடையாமலும், படுக்கையில் இருக்காமலும், நோய் நொடிகளினால் பாதிக்கப்படாமலும் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இவர்கள் நாளாந்தம் விவசாயம் உட்பட உடலுழைப்பினால் வாழ்ந்து வருவதைக் காணலாம்.

தமது வீட்டுத்தோட்டத்தில் பயிரிடப்படும் மரக்கறி, கிழங்கு வகைகள், தாவர வர்க்கங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் மக்கள் அதிககாலம் வாழ்ந்து வருவதற்கு காரணம் என்ன? மேற்கொண்ட ஆய்வில் மக்களின் உணவுப் பழக்க வழக்கங்களும் சரிவான நிலப்பரப்புமே முக்கிய காரணமாகக் கருதப்படுகின்றது. இங்கு பாதைகள் மட்டுமே நேரான சமதரையாகக் கருதப்படுகின்றன. வீடுகள் கூட சரிவான நிலப்பரப்பிலேயே அமைந்துள்ளன. விவசாயத்திற்கு சமதரை இங்கு கிடையாது. வயல்வெளிகளைக் காணமுடியாது. வாழும் சூழலிலுள்ள சரிவான தரைகளில் தமது இயல்புகளுக்கேற்ப அவரை, உருளைக்கிழங்கு, மரக்கறி வகைகள், கிழங்கு வகைகள், போர்லி, காதுமை என்பனவற்றைப் பயிரிட்டு, அன்றாட உணவு வகைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

பண்டைக்கால வயோதிபரை மாமிசம் எப்போது சாப்பிட முடியும் என வினவினால் பள்ளத்தாக்கில் குதிரை விழுந்து கால்களை முறித்துக் கொண்டால் தான் என நகைப்புடன் பதில் கூறுவர். ஆனால் பெரும்பாலும் பார்லியே இங்கு மூன்று வேளை முக்கிய உணவுப் பொருள் சாதமாக இருந்த பொழுதிலும் இப்பகுதிவாழ் மக்கள் சாதத்தை அதிகமாக உட்கொள்வதில்லை. வீட்டுத் தோட்டங்களில் தாமே பயிரிட்டு வந்த தானியங்கள், சோயா அவரை, மரக்கறிவகைகள், கிழங்கு வகைகளையே முக்கிய உணவாக உட்கொண்டு வருகின்றனர். புரதச்சத்தும் நார்த்தன்மை மிக்க உணவுப் பொருட்களை இப்பகுதிவாழ் மக்கள் உட்கொண்டு நோய் நொடியின்றி ஆரோக்கியமாக வாழ்ந்து வருகின்றனர். இரத்த அழுத்தம், இரத்தம் உறைதல், புற்று நோய் என்பன இப்பிரதேசத்தில் மிக மிக அரிதாகவே காணப்படுகின்றன.

மருத்துவ ஆய்வுகளினால் டாக்டர் கோமாதி, இப்பகுதிவாழ் மக்களைப் போன்று அனைவரும் தானிய வகைகளை உணவாக உட்கொள்வது ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகுக்குமென அறிவுரை வழங்குகின்றார். ஏனெனில் 1990-ம் ஆண்டு மருத்துவக் குறிப்புக்களில் 5, 6 மடங்கள், பாலர், சிறார் பாடசாலைகளில் உணவுப்பட்டியல்களை அறிமுகப்படுத்தி, ஊக்கமளித்தும் வருகின்றனர்.

வைத்தியசாலைகளிலும் நோயாளிக்கு, நோய்களுக்கு நிவாரணம் அளிக்கும் வண்ணம் குத்தரிசிச் சாதத்துடன் தானியங்களையும் அறிமுகப்படுத்தி வருகின்றனர். பாரம்பரிய மூலிகைகளும் இந்த உணவுப் பட்டியலில் இணையத் தொடங்கியுள்ளன.

ஒரு ஆண் அல்லது பெண்ணின் ஆரோக்கியம் அவர்கள் உண்ணும் தாவர வர்க்க உணவுவகையிலேயே தங்கியுள்ளன.

நன்றி: வீரகேசரி - 01-08-1993

௭ —

## பூமி ஒன்றே அதனைக் காப்போம்!

சென்ற ஜூன் 5-ம் திகதி உலகச் சூழல் தினமாகும். சூழலைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பையும், கடமையையும் உலகமக்களுக்கு உணர்த்துவதற்காக ஐக்கிய நாடுகள்சபை சூழல் தினத்தைப் பிரகடனப்படுத்தியது.

தேச எல்லைகளையும் கடந்து அனைத்துலக அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டிய ஐம்பதிற்கும் மேற்பட்ட உலகப் பிரச்சனைகளை ஐ. நா. சபை அண்மையில் இனங்கண்டுள்ளது. அவற்றில் பதினைந்திற்கும் மேற்பட்டவை சூழலைப் பாதுகாப்பது சம்பந்தமானவையாகும்.

பூமி ஒன்றே ஒன்றுதான். அதனைப் பராமரிப்பதும், அதன் வளங்களைப் பகிர்ந்து கொள்வதும் மிகக் கவனமாக மேற்கொள்ளப்படவேண்டியவை. பூமியைச் செல்லப்பிள்ளையாகக் கருதி சீராட்டித்



தாலாட்டி கவனமாகப் பாதுகாக்க வேண்டும். எங்கள் உலகச்சூழல் அனைத்து மக்களும் வாழும் வீடாகும். அது உடைந்துபோனால் எமது உலகவாழ்க்கையே நிர்க்கதிக்குள்ளாகிவிடும்.

வளியில் கரியமிலவாயுவின் வீதம் அதிகரிப்பதால் சீதோஷ்ண நிலைமைகளில் பெரும் மாற்றம்; அமிலமழையும் வளி மாசடைதலும்; கடல்நீர், நிலநீர் என்பன மாசடைதல்; மழைதரும் காடுகளை விவசாயம் மற்றும் மரத்தேவைகளுக்காக அதிவேகமாக அழித்தல் என்பன உலக மக்களை அச்சுறுத்தும் பிரதான சூழல் பிரச்சனைகளில் சிலவாகும்.

இவற்றில் இலங்கை போன்ற வளர்ந்துவரும் நாடுகளில் வனவளம் அழிக்கப்படுதலும் அதனால் உண்டாகும் விளைவுகளுமே முதலாவது சூழல் பாதுகாப்புப் பிரச்சனையாக மாறியுள்ளது.

மரங்கள் கரியமில வாயுவை உறிஞ்சி எடுத்துவிடுவன. அவை அழிக்கப்படும்போது வளி மண்டலத்தில் கரியமிலவாயுவின் வீதம் அதிகரித்து சீதோஷ்ண நிலைகளில் மாற்றம் ஏற்படுகிறது. நாம் இப்போது காணும் பருவமாற்றங்களும், குறைந்த மழையும் அதன் பெறுபேறுகளே.

ஆகையால் காடுகளை அழிப்பதை, மரங்களைக் கண்டபடி தறிப்பதை இயன்றளவு தவிர்க்கவும், தடுக்கவும் வேண்டும். அதே வேளை மரம் வளர்ப்பதில் தொடர்ந்து அக்கறையும் போதிய கவனமும் செலுத்தப்பட வேண்டும். மரங்களை வளர்ப்பதன் மூலமே மழையைத்தருவிக்க முடியும்.

நீர் நிலைகளை மாசுபடுத்தாதிருத்தல், எரிபொருள்களை அதிக அளவில் பயன்படுத்துவதால் வளிமண்டலத்தை மாசுபடுத்துதல், மண்வளத்தைக் கெடுத்தல், நீரை விரயமாக்குதல் ஏனைய இயற்கை வளங்களை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தி பூமியை நலிவுறச் செய்தல் என்பனவும் தடுக்கப்பட வேண்டும்.

இந்தப் பூமி எல்லோருக்கும் சொந்தமானது. இப்போது வாழும் சந்ததியினருக்கு மட்டுமன்றி இனிவரப்போகும் எத்தனையோ சந்ததிகளுக்கும் சொந்தமாகப் போவது. எனவே பூமியின் வளங்களைக் கெடுத்து, இயற்கையை நலிவுறச் செய்ய எவருக்கும் உரிமையில்லை.

அத்தோடு பூமியையும், அதன் வளங்களையும் பேணிப்பாதுகாத்து அடுத்த சந்ததியினரிடம் ஒப்படைக்கும் பாரிய பொறுப்பு உலக மக்கள் எல்லோருக்கும் உண்டு.

உலகச்சூழல் தினமான இன்று அதனை மனதில் இருத்தி சூழலை எல்லாவகைகளாலும் பாதுகாக்க சங்கற்பம் செய்வோமாக!

நன்றி: உதயன் 05-06-1993
ஆசிரியர் தலையங்கம்

உ—

## எமது பெரும் வீடாகிய பூமியின் வாழ்வும் எதிர்காலமும் ஆபத்தில்

எமது வீடுகளை நாம் சுத்தமாக வைத்திருப்பது போலவே எமது பெரிய வீடாகிய பூமிக் கிரகத்தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

ஆனால் பூமித்தாயின் பிள்ளைகளாகிய நாம் என்ன செய்துள்ளோம்?

தொழிற்துறைப்புகை நகரங்களைச் சுற்றித் சூழ்ந்திருக்கிறது. நச்சுக் கழிவுகழினால் நதிகளினதும் ஏரிகளினதும் நீர் அதன பளிங்குத் தன்மையை இழந்துள்ளது.; காடுகள் அழிக்கப்பட்டு வனாந்தரங்கள் ஆகியுள்ளன. பூமியின் உட்பகுதி உறிஞ்சி எடுக்கப்பட்டு வளமற்றதாகியுள்ளது.

பூமி என்னும் கிரகத்தைப் பாதுகாக்க ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இயற்கைத் தாய் கட்டியெழுப்பிய அமைப்பு சிதைக்கப்பட்டுள்ளது.

இவையெல்லாம் மனிதரின் நியாயமற்ற நடத்தையால் ஏற்பட்டுள்ளன. இதனால் எமது கிரகத்தின் வாழ்வும் எதிர்காலமும் ஆபத்தில் இருக்கின்றன.



சூழல் பற்றிய அக்கறையும் அறிவும் இன்று உலகில் வாழும் அனைவருக்கும் அவசியமாக இருக்கின்றன. உயிரியலாளர், புவியியலாளர், நிலவியலாளர் ஆகியோர் மாத்திரம் அல்ல கணிதவியலாளர், பௌதிகவியலாளர், இரசாயனவியலாளர், வரைவியலாளர், பொறியியலாளர் ஆகியோர் புவிச்சூழல் மாசுபடுவதைத் தடுத்து நிறுத்த அறிவியல் ரீதியான திட்டங்களை முன்வைத்து செயற்படுத்த வேண்டும்.

உலகளாவிய சூழல் மாசுபடும் பிரச்சனை எவ்வாறு தோன்றியது?

மனிதர் முன்னேறிய தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி இயற்கை வளங்களைந் தமது பாவனைக்கு உட்படுத்தினார்கள். இதனால் மனிதரின் வாழ்க்கை நிலைமைகள் விருத்தியடைந்து வளம் ஏற்பட்டு நாகரிகம் வளர்ந்தது.

ஆனால் இயற்கையை வெல்லும் இந்த வளர்ச்சியின் போக்கில் மனிதர் தமது நடவடிக்கைகளின் இயற்கை அத்திவாரங்களைத் தகர்த்தனர். சமூகத்திற்கும் இயற்கைக்கும் இடையிலுள்ள உறவைக் குழப்பினார்கள்.

தற்போது இந்த அன்னியோன்யமான உறவை மீட்பது உயிரின வாழ்க்கைச் சூழலியலின் முக்கிய பணியாகியுள்ளது. இதற்கு முதன் முதலாக இயற்கையைப் பொறுத்த மனிதரின் 'பேரவாவுடன் உண்ணும்' சிந்தனையை மாற்ற வேண்டும்.

மனிதர் அமுல்படுத்தும் திட்டங்கள் இயற்கை அமைப்பைச் சீர் குலைக்காதனவாய் இருக்க வேண்டும். இயற்கை வளங்களை நியாயமான முறையில் பயன்படுத்த மனிதர் கற்றுக்கொள்ள வேண்டும், அப்போது இழப்புகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

இதன்படி புதிய இயந்திரங்கள், தொழில்நுட்பங்கள், பொருட்கள், நிர்மாணத் திட்டங்கள் உபகரணங்கள் ஆகியன உயிரின வாழ்க்கைச் சூழலுடன் ஒத்துப் போகின்றனவா என்பதைக் கணிப்பிட வேண்டும்.

விஞ்ஞானத் தொழில்நுட்பப் புரட்சியின் வளர்ச்சிகள் நாட்டுக்கு நாடும் கண்டத்துக்குக் கண்டமும் வேறுபடுகின்றன. ஆனால்

உலகரீதியான உயிரினச் சூழலுக்கு ஆபத்து ஏற்படுவது பொதுவானதோர் பிரச்சனையாக உள்ளது.

சூழலைப் பாதுகாப்பதற்கும் இயற்கை வளங்களை நியாயமான முறையில் பயன்படுத்துவதற்கும் பல்வேறு வழிமுறைகள் உண்டு. இயற்கையைப் பாதுகாக்க உலகம் முழுவதுக்குமான ஒரு முகப்பட்ட வரையறை இருக்க வேண்டும்.

இயற்கையும் சமுதாயமும் பிரிக்கப்பட முடியாதவை. ஆகவே தான் உலகரீதியில் உயிரினச் சூழலியல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு சர்வதேசிய ரீதியான ஒருமித்த திட்டம் தேவையாகின்றது. மனிதனுக்கும் இயற்கைக்குமிடையே ஓர் உயிரியல், சூழலியல் ரீதியான சமரசத்தை ஏற்படுத்த மனிதரின் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

நன்றி: ஈழநாடு
05-06-1993

உ

# நம்பிக்கையும் முயற்சியும்

நாம் சமுதாயத்தில் சிலரைப் பார்க்கின்றோம். அவர்கள் எந்நேரமும் தங்கள் சோதிட குறிப்புகளை எடுத்துக் கொண்டு சோதிடர்களிடம் அலைகின்றார்கள். அவர்களிடம் திருப்தி அடைய முடியாமல் மேலும் கைரேகை நிபுணர்கள், எண்சாத்திர நிபுணர்கள் என்றெல்லாம் நாடிப் போகின்றார்கள். இப்படிச் சொல்லுகின்ற போது இச்சாத்திரங்கள் அனைத்தும் பொய்யென்று கூறுவதாக அர்த்தம் கொள்ள வேண்டாம். இவை அனைத்தும் யூகித்து சொல்லப்படுகின்ற விடயங்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஒருவன் தன்னுடைய திறமைகளைப் பற்றி எண்ணிப்பார்க்காமல் கிரகங்களின் போக்கை வைத்தே வாழ்க்கையை அமைத்துக் கொள்ளப் போகிறேன் என்றால் அது பரிதாபத்திற்குரியது. நம்முடைய முயற்சிகள் தளர்வின்றி உறுதியானதாக இருக்குமானால் நாம் ஒரு வேலையை எந்த நேரத்தில் தொடங்கினாலும் அது நல்ல நேரமாக, நல்ல நாளாகத்



தான் இருக்கும். இதனால் தான் திருஞானசம்பந்தர் நாள் என் செய்யும், கோள் என் செய்யும் என்று பாடியிருக்கின்றார். ஒரு முயற்சியை நல்ல நேரத்தில் ஆரம்பிக்கின்றோம் என்ற எண்ணம் அந்த முயற்சியைச் செய்வதில் உற்சாகத்தையும், நம்பிக்கையுடன் வேலை செய்யும் மனோபாவத்தையும் ஏற்படுத்துகிறது என்றளவில் பயனுடையதாக இருக்கலாம். அதற்காக வேலையைச் செய்யாமல் நல்ல நேரம் எப்போது வரும் என்று பார்த்துக் கொண்டு இருப்பவன் வாய்ப்புக்களை இழக்க வேண்டியவனாகின்றான். சாதகம் சாதகமாகிற வரையில் நல்ல காலத்துக்காகக் காத்திருக்கின்றவர்கள் இறுதிவரை காத்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். காரணம் வாழ்க்கையின் பெரும் பகுதி நேரத்தை, சாதகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதில் செலவிடுகிறார்களே ஒழிய தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான முயற்சிகள்பற்றி எண்ணிப் பார்ப்பதில் செலவிடுவதில்லை.

அடுத்துவரும் இரண்டு வருடங்களும் உங்களுக்கு நன்றாக இல்லை. நீங்கள் எந்தக் காரியமும் செய்யக்கூடாது என்று சோதிடன் சொல்லி விட்டால்போதும், இவர்கள் வீட்டில் விழுந்துபடுத்து விடுவார்கள். இந்த இரண்டு வருடமும் எந்த முயற்சியிலும் ஈடுபடமாட்டார்கள். எதுவித முயற்சியுமில்லாமல் கழியும் இந்த இரண்டாண்டுகள் வாழ்க்கையில் என்றுமே திரும்பிவரப் போவதில்லை என்பதை இவர்கள் எண்ணிப் பார்க்கமாட்டார்கள். இன்னொன்று பார்ப்போம். மற்றவர்களுக்கு நேரம் சரியில்லை, கிரகம் சரியில்லை, இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்று ஆலோசனை வழங்கும் சோதிடர்கள் தங்களுடைய தொழிலை மட்டும் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பார்கள். எப்போது போனாலும் சோதிடம் பார்ப்பார்கள்.

யப்பான் நாட்டைப் பாருங்கள். அங்குள்ளவர்கள் சதாநேரமும் தொழிலறிவு சார்ந்த துறைகளில் தமது முழுக் கவனத்தையும் செலுத்தி உழைக்கின்றார்கள். இன்றும் உலகின் தொழில்நுட்பத்துறையில் தலைசிறந்த நாடாகத் தம்மை உயர்த்திப் பெருமையுறுகிறார்கள். இவர்கள் சோதிடர்களை நாடிச் செல்வதாக அல்லது அவர்கள் சொல்வதை ஏற்று நடப்பவர்களாக நாம் அறியவில்லை. எந்நேரமும் உழைப்பையே பெரிதென்று போற்றி வாழ்கின்றார்கள்.

இதுமட்டுமல்ல. இன்று உலகப் பெரும் விஞ்ஞானிகளாய், தொழிலதிபர்களாய், எழுத்தாளர்களாய் வாழ்ந்தவர்கள், தங்கள்

எதிர்காலத்தை நிர்ணயிக்க சோதிடர்களை நாடிச் சென்றதாக அவர்களுடைய வாழ்க்கையில் எந்தவிதமான குறிப்புக்களுமில்லையென்பது நோக்கத்தக்கது.

ஆகவே இம்மாதிரியான விடயங்களில் தேவைக்கதிகமான கவனத்தைச் செலுத்துவதன் மூலம் நாட்களை விரயமாக்குகின்றவன் தன்னால் எதுவும் ஆகாது என்கின்ற அவநம்பிக்கைக்கு தன்னை முழுமையாக ஆளாக்கிக் கொண்டவனாகின்றான்.

ஒருவனுடைய பெருமைக்கும், அவனுடைய சிறுமைக்கும் அவன் செய்கின்ற செயல்களே காரணமாகின்றன என்றுதான் வள்ளுவர் தனது பொய்யாமொழியில் குறிப்பிடுகின்றாரே தவிர, கிரகங்கள்தான் காரணமென்று எந்த இடத்திலும் அவர் குறிப்பிடவில்லை. மேலும் தெய்வத்தால் ஆகாதெதெனினும் தம் மெய்வருந்த கூலி கிடைக்கும் என்றும் வலியுறுத்துகின்றார்.

ஒன்றை அடைந்தே தீருவது என்ற எண்ணம் உறுதியாகும்போது உங்களால் சும்மா இருக்க முடியாது. அதற்கான முயற்சிகளில் நம்பிக்கையோடு ஈடுபடுகின்றீர்கள். எல்லா முயற்சிகளுமே வெற்றியைக் கொடுத்துவிடுவதில்லை. சில முயற்சிகள் வெற்றியளிக்காமலும் போகலாம். ஆனால் உங்களுடைய எண்ணம் உறுதியானதாக இருக்கும்போது தொடர்ந்து முயற்சி செய்கிறீர்கள். வெற்றி கிட்டும்வரை முயற்சியைத் தொடருகிறீர்கள்.

நம்பிக்கையின் ரகசியமே இதுதான். உங்களுடைய எண்ணம் வலிமை பெற்றதாக இருக்குமானால் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுக்கும் சக்தி அந்த எண்ணங்களுக்கு உண்டு. அழுத்தமான நம்பிக்கையில்லாமல் வாழ்க்கையில் எவரும் முன்னேற முடியாது. ஒன்றை நம்பாதபோது அதில் முழுதாக ஈடுபட்டு செயற்பட வழியில்லாமல் போகிறது. ஏனோதானோ என்று செய்யும் எந்தக் காரியமும் உருப்படியாவதில்லை.

ஆற்றல் என்பது மனிதனுக்கு வெளியில் இல்லை அவனுக்கு உள்ளேதான் இருக்கின்றது. தனக்குள் உள்ள அந்த ஆற்றலை அவனே முழு நம்பிக்கையோடு உணர்ந்து செயலாற்ற வேண்டும். அவனுடைய முயற்சியால்தான் அதை வெளிப்படுத்த வேண்டும்.



சிலரோடு நாம் கதைக்கும்போது எனக்கு அதிர்ஷ்டமில்லையென்று விரக்தியோடு சொல்வார்கள். சந்தர்ப்பங்களின் சேர்க்கையை வேண்டுமானால் அதிர்ஷ்டம் என்று பெயரிட்டு அழைக்கலாம். சந்தர்ப்பங்கள் ஒரு போதும் தாமாக சேருவதில்லை. முயற்சியே இல்லாமல் சந்தர்ப்பங்கள் உருவாகுமென்று எதிர்பார்க்க முடியாது. சில மனிதர்கள் சில சமயங்களில் நம்முடைய வெற்றிக்கும் சாதனைக்கும் துணையிருக்கின்றார்கள் என்பது உண்மை. அதிர்ஷ்டமில்லையென்று வீட்டில் சோம்பேறியாய் படுத்திருந்தால் இந்த மனிதர்களின் உதவி எப்படிக் கிடைக்கும்.

சோம்பேறிகள் எப்போதும் சுகமாகப் பேசுவார்கள் உபதேசமும் செய்வார்கள். எதற்கும் சுலபத்தில் விளக்கம் சொல்வார்கள். எல்லாமே அவர்களுக்குத் தெரியும். ஒன்றைத்தவிர! அதுதான் முயற்சி-உடலுழைப்பு.

உலகத்திலேயே மிகவும் மலிவானதும் சுலபமானதும் உபதேசம்தான். சோம்பேறியின் மூளை சாத்தானின் தொழிற்கூடம் என்கிறது ஒரு பழமொழி.

முடியும் என்கிற நம்பிக்கையோடு உடலுழைப்பில் ஈடுபடுதல் வேண்டும். முடியும் என்ற நம்பிக்கையோடு செயல்பட்டவர்களே சாதனைகளைப் புரிந்திருக்கின்றார்கள். முடியாது என்பது சோம்பேறியின் சுலபமான தத்துவம்,

ஆகவே வாழ்க்கையில் நீங்கள் வெற்றி பெற வேண்டுமானால் என்னால் முடியும் என்கின்ற முயற்சியோடு கூடிய - உடலுழைப்பில் நம்பிக்கைக்கு வலிமை சேர்த்து உங்களுடைய வாழ்க்கைப் பாதையில் சாதனை புரியுங்கள்.

தொகுப்பு - சக்கரவர்த்தி

ட—

## சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில்
## மரங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன

— கலாநிதி க. கனகராசா —

சுற்றுச் சூழலை நிலைபெறுத்துவதில் மரங்களும் அவற்றின் ஒவ்வொரு பகுதியும் எவ்வாறு உதவுகின்றன என்பதை நாம் இன்று சிந்திப்பது பொருத்தமாகும்.

ஈழத்தமிழகத்தில் கோடைகாலாத்தில் பெரும்பகுதி வரட்சிக்கு உள்ளாகிறது. புல், பூண்டு, செடி, மரங்கள் இன்றிக் கட்டாந்தரையாக உள்ள நிலப்பரப்பும் ஏராளமாக இங்குண்டு. இதனால் இவை கோடைகாலத்தில் வெப்பத்தில் அனல் கேந்திரங்களாக மாறிவிடுகின்றன. வெயிலில் இந்நிலப்பரப்பும் மிக வெப்பமடைந்து அந்த மிகு வெப்பத்தைக் காற்றுக்கு ஊட்டுகிறது. அனல்காற்று அருகிலுள்ள பயிர்களை எல்லாம் தீய்த்துவிடுகின்றன. பயிருக்கு இறைத்த நீர் எல்லாம் வெகுவிரைவில் உறிஞ்சப்பட்டு விளைச்சலும் குன்றிவிடுகிறது. மரங்கள் வளர்திறனை இழக்கின்றது. பயனும் நலிகிறது. இன்று இது கண்கூடு.

இதற்கான காரணமென்ன? கட்டாந்தரை நிலங்களில் விழும் மழைநீரை இத்தரை நிலத்தின்கீழ் உட்புகவிடுவதில்லை. மாறாக மழை நீரை அதன் போக்கில் விருட்டென்று ஓடிவிடச் செய்கின்றன. வெள்ளம் மண்ணையும் அரித்தெடுத்து அள்ளிச் செல்கிறது. நிலத்தடி நீரோட்டத்திற்கு நீர் சேர்வதில்லை. நீர்வரத்து இல்லாத காரணத்தினால் அயலிலுள்ள கிணறுகளில் ஆண்டுதோறும் நீர்மட்டம் தாழ்ந்து கொண்டே போகிறது. ஏனைய நீர்நிலைகளில் துரிதமாக நீர் ஆவியாகமாறிப் பயனற்றுப் போகிறது.

இக்கட்டாந்தரை நிலங்களில் வரட்சியைத் தாங்கக்கூடிய மரங்களை நட்டு வளர்ப்பதால் அவற்றின் வேர்கள் மண்ணைப் பற்றிக் கொண்டு மண்ணரிப்பைத் தடுத்து விடுகின்றன. அத்தோடு மழை நீரையும் மரங்களின் வேர்கள் தரைக்குள் இழுத்துக் கொள்கின்றன. வேர்கள் வளர்ச்சியடையும் பொழுது இறுக்கமான கடின மண்ணைப் பிளந்து காற்றோட்டத்திற்கு வகை செய்வதுடன் மழைநீர் கீழ் செல்லவும் வழி செய்கிறது. உதிரும் இலைகளில் மேல்மட்ட மண்ணரிப்பு தடுக்கப்படுகிறது போல மரவேர்கள் மண்ணைக் கெட்டியாகப் பற்றிக் கொள்வதினால் காற்றினால் ஏற்படும் மண்ணரிப்பும் ஏற்படுவதில்லை. மரத்தின் இலைகளிலிருந்து வெளியாகும் நீராவி காற்றைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகிறது. காற்றில் அள்ளப்பட்டுவரும் தூசுதுகள்களை மரத்தின் இலைகள் தடுத்து வைக்கின்றன. இவை மழையின் போது கழுவப்பட்டு தரையைச் சேர்கின்றன.

மரங்களின் தழையும், பூவும், காயும், கனியும், பட்டையும், வேரும், கிழங்கும் பிணிபோக்கும் மருந்தாகவும், பசிபோக்கும் உணவாகவும் உதவுவதுடன் சுகவாழ்வுக்கான ஊட்டச்சத்தையும் உதவுகின்



றன. கட்டுமான வேலைகட்கு உறுதியாக நிராந்திகளையும், வளைகளையும் தருவதுடன் தொட்டிலும், கட்டிலும் ஏனைய தளபாடங்கள் செய்வதற்கும் உதவுகின்றன. வேலை ஏற்படுத்திக் கொடுக்கிறது. கயிறு, கடதாசி, தேயிலை, கோப்பி, ரப்பர், துணி, பூச்சிகொல்லிகள், படைகொல்லிகளும் பெற்றுக் கொள்ள மரங்களே உதவுகின்றன. அடுப்பங்கரையிலும், சுண்ணாம்பு, செங்கற்சூளைகளிலும் அவசியமான விறகை மரங்கள் தருகின்றன. நீர்நிலைகளைச் சூழ மரங்கள் நட்டு வைப்பதால் அவற்றின் நிழலினால் கீழேயுள்ள தரை குளிர்ச்சிடைவதால் இந்நீர்நிலைகளிலுள்ள நீர் ஆவியாக மாறி விரயமாவது வெகுவாக கட்டுப்படுத்தப்படுகின்றது. மரங்களைச் சூழ உதிரும் சருகுகளும் பட்ட சுள்ளிகளும் ஈரலிப்பை உண்டாக்கிக் கூட்டுப்பசளையாக்கிச் சூழ வளரும் செடி, கொடிகளின் வளர்ச்சிக்கு ஊட்டமளிக்கின்றன.

மண்ணின் பசளைத் தன்மைக்கும், வளத்திற்கும் வேர்கள் வெகுவாக உதவுகின்றன. ஆழச் செல்லும் வேர்கள் சிறிய மரங்களால் எட்டமுடியாத ஆழ்பரப்பிலிருந்து ஊட்டத்தையும், நீரையும் மேலே கொணர்கின்றன. முதிர்ச்சியடைந்த வேர்கள் உக்கும் பொழுது மண்ணின் வளத்திற்கு உதவுகின்றன. மரங்கள் சில ஊட்டத்தைக் காற்றிலிருந்து பெற்று அதனைக் கீழே மண்ணுக்குள் சேர்ப்பிக்கின்றன.

கோடையில் இளைப்பாற மட்டுமன்றி குளிர்தருக்கள் கீழே அமர்ந்து கல்வி பயிலவும், உண்டு உறங்கவும் உதவுவதை எம்மைச் சூழக் காண்கிறோம். சுற்றுச் சூழலுக்கு மேற்கண்டவாறு பல்லாற்றானும் உதவிடும் மரங்கள் பல் துறைப்பட்ட தொழில் வாய்ப்பையே ஏற்படுத்தித் தருகின்றன.

வன மகோற்சவத்தை வருடாவருடம் நடத்தி வைத்துச் சீரியதொரு கலாசாரத்தைப் பின்னணியாகக் கொண்ட நாம் இன்று காடுகளை அழித்து மரங்களைத் தறித்து பருவ நிலைகளைத் தடுமாற வைத்துவிட்டோம்.

நினைவு தினங்களில் மரம் நடுவது என்பதை விரதமாகவும், தறிக்கப்படும் ஒவ்வொரு மரத்திற்குப் பதிலாக மற்றுமொரு மரத்தை நடுவோம் – பராமரிப்போம் என்பதைச் சபதமாகவும் ஏற்று நாம் ஒவ்வொருத்தரும் செயற்படுவது அவசியம். முனைப்புடன் செயற்படுவோம்.

நன்றி: ஈழநாடு, 5-6-93

ஏ—

# உனக்கும் ⇄ எனக்கும்

—இயல்வாணன்—

**பொ**ருளாதாரக் கட்டிறுக்கம் எங்கள் குரல் வளைகளை நசுக்கிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் எமது நிமிர்வு மிதமானது. பஞ்சத்தாலும், பசியாலும் வாடும் சோமாலியாவையும், எதியோப்பியாவையும் பார்க்கும் உலகால் எமது மக்களைப் பார்க்க முடியாவிட்டாலும்கூட, எமது எத்தனையோ மக்களின் வாழ்வு அதுபோல அதைவிடக் கொடியதாக உள்ளமை உண்மையே.

அடிப்படையில் எந்தெந்த வசதிகளைக் கொண்டிருந்தோமோ அந்தந்த வசதிகளற்று நாம் வாழ்கிறோம். இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ளவர்களது நிலை மிகவும் துன்பகரமானது. பலவித இடர்களும் நிறைந்தது. முகாம்களில் உள்ளவர்களது வாழ்வு நிலை நாளைய மக்களுக்குச் சேதி சொல்லும் காலப்பதிவு இலக்கியங்கள் வகைமாதிரிக்கொன்று.

அந்தப் பெண் இடம் பெயர்ந்தோர் முகாமொன்றில் சிறு குடிசைக்குள் வாழ்கிறாள். அவளது கணவன் நோயாளி அந்தக் குடிசையின் ஒரு மூலையில் அவன் எப்போதும் முடங்கியே கிடந்தான்.

நிவாரணச் சாமான் கிடைத்தது. வேறு வருமானமில்லை. ஏழைகளுக்கு யார் உதவுவார்?

போதாததற்கு எட்டு வயதிலிருந்து ஐந்து பிள்ளைகள் கடைசிக்கு இன்னமும் ஒரு வயதாகவில்லை. வீட்டுக்கு வருமானம் தேவைப்படுவதால், அவள் – தான் தங்கியிருந்த பகுதியில் கூலி வேலை செய்து வந்தாள். புல் பிடுங்குதல், கிடுகு பின்னுதல் என வேலைக்காய்ச் சென்று கிடைக்கும் நேரங்களில் பணத்தைப் பெற்று வந்தாள்.

வீட்டில் அவளில்லாமல் குழந்தைகள் நிலை எப்படியிருக்கும்?

ஒருநாள் – அவள் வேலையை முடித்து வீட்டிற்கு வந்த வேளை – எலும்பும் தோலுமாய்ப் போஷாக்கின்றி இருந்த அவளது கடைசிப் பிள்ளை இறந்து கிடந்தது.



உணவில்லை. கவனிப்பில்லை. பிள்ளை போஷாக்கின்மையால் உயிரிழந்து விட்டது.
அதுமட்டுமா?

போஷாக்கின்மையால் ஏனைய குழந்தைகளும் நோய்களால் மாறி மாறிப் பாதிக்கப்பட்டவண்ணமே உள்ளன.

இவர்களைக் கவனிக்க யாருளர்?

இடம் பெயர்ந்தோர் முகாம்களில் விளக்கெரிவது மிகக்குறைவு. அனேகமான குடிசைகளில் பழம் சட்டியொன்று வைத்திருக்கிறார்கள். எங்காவது தேடிப் பழஞ் செருப்பு, பழம் ரயர், ரியூப் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களை எடுத்து, சிறு சிறு துண்டுகளாக்கி வைத்திருப்பார்கள்.

இரவு - இருள் நிறைந்த வேளைகளில் அவற்றைச் சட்டியில் போட்டுத் தீமூட்டி, அந்த வெளிச்சத்தில் வேலைகளைச் செய்வார்கள். மற்றபடி நிலவுதான் எல்லாமே.

இவற்றை நாம் நிச்சயம் வெளியுலகுக்கும் எமது அடுத்த சந்ததிக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

ஏ—

## வாந்திபேதி - (சொலரா)

I. நோயின் அறிகுறிகள்:
(இது ஒரு பயங்கரமான தொற்று நோய்)

1. திடீரென ஏற்படும் வாந்தியும், நீர்த்தன்மையான வயிற்றோட்டமும்.
2. உடம்பில் உள்ள நீர் மிக வேகமாக வற்றிக் கொண்டு போகும்.
3. தளர்ந்து வீழ்தல்.
4. 24 மணித்தியாலத்தில் இறப்பும் ஏற்படக்கூடும்.

2. நுண்ணுலம் (கிருமி): கொலரா வைபிறியோ.

3. தொற்றும் முறைகள்:

1. நோயாளியின் மலம், வாந்தி மூலம் கிருமிகள் வெளிவரும்.
2. அக்கிருமிகள் நாம் உண்ணும், குடிக்கும் பதார்த்தங்களில் சேர்ந்து உட்செல்லும்.
3. வீட்டு ஈக்களால் இக்கிருமிகள் எமது உணவிற்கு வந்து சேருகின்றன.
4. நோயாளியின் மலம், வாந்தி சேர்ந்த உடை முதலிய பொருட்களை கிணற்றருகில் கழுவும்போது இக்கிருமிகள் கிணற்று நீருடன் கலக்கச் சந்தர்ப்பம் உண்டு.
5. நோயாளியைப் பராமரிப்பவர்கள், பார்க்கச் செல்பவர்கள் இக்கிருமிகளை தங்கள் கைகளில், உடைகளில் தொற்ற வைத்துக் கொண்டு தங்கள் வீடுகளிற்கோ வேறு இடங்களிற்கோ சென்று இக்கிருமிகளைப் பரப்ப முடியும்.

4. நோயரும்பு காலம்:

கிருமிகள் தொற்றி சில மணித்தியாலங்கள் தொடக்கம் 5 நாட்கள் வரைக்கும் நோயரும்பு காலம் எனப்படும். அதாவது நோயின் கிருமிகள் உட்சென்று அதன் அறிகுறிகள் வெளிவருவதற்கு இடைப்பட்ட காலம். இது சராசரியாக மூன்று நாட்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

5. தடைமுறைகள்:

1. நீரைக் கொதிக்க வைத்து ஆறியபின் குடிக்க வேண்டும். (சுடுதண்ணீர் அல்ல)
2. மலசலம் மலகூடத்திலேயே கழிக்கப்பட வேண்டும்.
3. நோயாளியின் வாந்தி, மலம் நன்றாக தொற்று நீக்கிய பின்பே அகற்றப்பட வேண்டும்.
4. உணவுப் பொருட்கள் எப்போதும் ஈக்கள் மொய்யா வண்ணம் மூடி வைத்திருத்தல் வேண்டும்.



5. நோயாளியைப் பராமரிப்பவர்கள், உணவுப் பொருட்களைப் பரிமாற முன், தங்கள் கைகளை கிருமிகொல்லி கலந்த நீரினால் கழுவ வேண்டும்.
6. நோயாளியின் படுக்கை விரிப்புக்கள், உடைகள் முதலியன கொதிக்கிற நீரில் அலம்ப வேண்டும்.
7. நோயாளியின் வீட்டில் மாத்திரமன்றி அந்தச் சூழலிலுள்ள எல்லா வீடுகளிலும் ஈக்கள் உற்பத்தியாகும் நிலையங்கள் அழிக்கப்பட வேண்டும்.
8. நோயாளியுடன் தொடர்புள்ள அனைவரும் தடுப்பு மருந்து பாய்ச்சிக் கொள்ள வேண்டும்.
9. இந்த நோயின் அறிகுறிகள் காணப்பட்டவுடன் சுகாதாரப் பகுதியினருக்கு அறிவித்தல் மிகமிக அவசியமாகும்.
10. திறந்து வைத்திருக்கும் உணவுகளை வாங்கி உண்ணல் கூடாது.
11. சமைக்காமல் உண்ணும் உணவுகள் நன்றாகக் கழுவிய பின்பே உண்ணல் வேண்டும்.
12. நோய் பரவும் நாட்களில் கூடியவரை ஓரளவு சூட்டுடன் உணவுகளை உட்கொள்வது விரும்பத்தக்கது.

சி. பொன்னம்பலம்
இளைப்பாறிய
சுகாதாரக்கல்வி அதிகாரி

கரவெட்டி.
22-09-1993.

உ –

அறம் 2 சிந்தனை 3 ன் 34-ம் பக்கத் தொடர்ச்சி

சித்திரை, வைகாசி, ஆனி – 1993

# ஐந்துவித அணுக்கூறுகளும் அவற்றின் செயற்பாடுகளும்

— நிறுவனர் —

பறவையினங்களாக மாற்றமடைந்த இவ்வுயிரினங்கள் பெரும்பாலானவை, மரங்களிலே வசிக்கத் தலைப்பட்டன. இதன் காரணமாக சுத்தமான காற்றை சுவாசித்தன. மிகுந்த ஒளியில் உலவக்கூடியதான நிலை ஏற்பட்டது. அதாவது அவ்வுயிர்களின் ஐந்துவித அணுச்சேர்க்கைகள் விகிதாசாரத்தில் தீ, காற்று அணுக்கள் விகிதம் சற்று அதிகரித்த விகிதத்தினை அடைந்தன. இவ்விதமாக தீப்பொருளான உண்மை, காற்றுப் பொருளான அறிவு ஆகியவை விகித அளவுகளில் கூடுதலாகக் காணப்பட்டமையினால், அவை அறிவின் காரணமாக தாவர பட்சணிகளாகவே பெரும்பான்மையானவை உருவாகின. இவ்வளர்ச்சிப்போக்கின் காரணமாக இவை பெரும்பாலும் தானியவகைகளை உண்டு வரலாயின. பயறு, நெல்லு, சாமை, தினை போன்றவற்றை இவை உண்பதற்கு விருப்பம் கொண்டு அவை தம் ஆற்றலினை விருத்தி செய்ததன் மூலம் தம் வாய்ப்பகுதியில் தானியங்களை உடைத்து உண்ணக் கூடியதாக அலகுகளை தம் வினைப்பயன் காரணமாக ஏற்படுத்திக் கொண்டன. கிளிகள் நெல்வயல்களில் நெல்லை உடைத்து அரிசியை வேறாக்கி எடுத்து உண்ணுவதை நாம் அன்றாட வாழ்க்கையில் கண்டுள்ளோம். இவ்வாறாக இப்பறவையினங்கள் தம் இயல்பூக்கங்களுக்கும், பாதுகாப்பிற்கும், தேவைக்கும் ஏற்றவாறாக 5 வித அணுச்சேர்க்கை மாறுபட அலகுகளை நீளமானவையாகவும், குறுகியனவாகவும், வளைந்தனவாகவும் ஆக பல்வேறு வகைப்பட்டனவாக ஆக்கிக் கொண்டன.

அதேபோல தம் உடற்பாகத்தின் நிறத்தினையும், அவையவை வாழ்ந்த சூழலுக்கும், பாதுகாப்பிற்கும் தம் இயல்பூக்கத்திற்கும் அமைவாக பல்வேறு நிறங்களாகவும் ஆக்கிக் கொண்டன.



ஒரு கிளியின் நிறம் பச்சையாகவும், ஒரு காகத்தின் நிறம் கறுப்பாகவும், ஒரு கொக்கின் நிறம் வெள்ளையாகவும் என பறவைகளின் நிறங்கள் மாறுபட்டிருப்பதனையும், அவ்வாறே அவற்றின் ஒலிகளும் மாறுபட்டிருப்பதையும் நாம் காண்கின்றோம். இவ்வாறாக அவையவை தத்தம் வாழ்க்கைப் பாங்கிற்கு ஏற்றவிதமாக வாழ முயற்சி செய்து அங்கே ஐந்துவித அணுக்களிலும் விகிதாசார மாற்றம் ஏற்பட வெவ்வேறுபட்ட இயல்புகளையுடையனவாக இப் பறவையினங்கள் மாற்றமடைகின்றன.

கிளியை எடுத்துக் கொண்டால் பச்சை நிறத்தையுடைய உடற்பாகத்தையும், குறுகிய வளைந்த அலகினையும், இனிய ஒலியையும் உடையதாயும் தானியங்களை உண்டு வாழும் பறவையாகவும், கொக்கு என்ற பறவையினை எடுத்துக் கொண்டால், அது நீளமான கூரிய அலகினையும், நீளமான கால்களையும், வெள்ளைநிற உடற்பாகத்தையும் உடையதாயும் மீன்குஞ்சுகள், மற்றும் புழு. பூச்சிகளை உண்ணும் பறவையாகவும், காகத்தினை எடுத்துக் கொண்டால் இது கரியநிற உடற்பாகத்தையும், சுமாரான நீளமுடைய அலகினையும் உடையதாயும் தானியங்களையும் மாமிசத்தையும் உண்ணும் பறவையாகவும் காணப்படுவதை நாம் அவதானித்துள்ளோம். அவ்வாறு சில பறவைகள் பூக்களில் தேன்குடித்து வாழ்வதையும், சில பறவைகள் பழ வர்க்கங்களை உண்டு வாழ்வதையும் நாம் கண்டுள்ளோம். இவ்வாறாக இவை தம் வாழ்க்கையை சுற்றாடலுக்கும், அதேவேளை தம் பாதுகாப்பிற்கும் ஏற்புடையதாக தத்தம் ஆற்றலறிவு மூலம் ஏற்படுத்திக் கொள்கின்றன.

நல்ல காற்றையே சுவாசிப்பதனாலும், தாவரபட்சணிகளாகவே வாழ்வதனாலும் இப்பறவையினங்களில் பெரும்பான்மையானவை நல்ல பழக்கங்களையுடையனவாக, தீமை செய்யாதனவாக் காணப்படுவதை பெரும்பாலும் காணக்கூடியதாக இருக்கின்றது. அதாவது இவற்றுக்கு காற்று அணுக்களினதும் ஒளி அணுக்களினதும் விகிதாசாரப்பங்கு கூடுதலாக இருப்பதனால் இவை அவ்வாறு காணப்படுகின்றன. ஆயினும் சில பறவைகள் இவற்றிற்கு மாறுபட்ட விதமாகவும் காணப்படுகின்றமையும் உண்டு. காரணம் அவற்றின் ஐந்துவித அணுச்சேர்க்கை விகிதாசார மாறுபாட்டினால் அவை மாமிச பட்சணிகளாகவும், பகற்பொழுதில் வெளியே உலவவிரும்பாத பறவையினங்களாக அதாவது

ஒளியணுவின் விகிதாசாரம் குறைவானதானவைகளாகவும் காணப்படுதலேயாகும். (ஆந்தை)

சில பறவைகள் பறக்கும்போது மிகவேகமாக சிறகடிப்பதையும், சில பறவைகள் பறக்கும்போது சுமாரான வேகத்துடன் சிறகடிப்பதையும், சில பறவைகள் பறக்கும்போது மிகவும் மெதுவாகவே சிறகடிப்பதையும் நாம் காண்கின்றோம். அவற்றிற்குக் காரணம் அவ்வப் பறவையினங்களின் ஐந்துவித அணுக்கூறுகளில் காற்றணுக்கூறுகளின் விகிதாசாரமேயாகும். பருந்து போன்ற பறவையினங்கள் மெதுவாகவும், காகம் போன்ற பறவையினங்கள் சுமாராகவும், சிட்டுக்குருவி போன்ற பறவையினங்கள் மிகவேகமாகவும் சிறகடித்துப் பறப்பதனை நாம் காணக்கூடியதாக உள்ளது. இவற்றுக்குக் காரணம் இவற்றின் ஐந்துவித அணுக்கூறுகளில் காற்றணுக்களின் விகிதம் முறையே கூடுதலாகவும், சுமாராகவும், குறைவாகவும் காணப்படுதலேயாகும். ஐந்துவித அணுச்சேர்க்கைக்கு ஏற்ப சிறகுகள் பலவிதமாக அமைந்ததால் அவற்றின் செயற்பாடுகள் மாற்றமடைந்துள்ளன.

நீரணுக்களின் விகிதாசாரம் கூடுதலாகக் காணப்படுகின்ற பறவையினங்கள் பெரும்பாலும் நீர்நிலைகளிலேயே வாழ்வதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. வாத்து போன்ற பறவைகள் நீரணுக்கள் கூடிய பறவைகளாகும்.

பறவையினங்கள் தத்தம் ஆற்றலுக்கும், பாதுகாப்பிற்கும் ஏற்ப தத்தம் உறைவிடங்களை ஏற்படுத்திக் கொள்கின்றன. சில பறவைகள் தென்னந்தும்புகளினால் மிக நேர்த்தியான முறையில் கூடுகளை மரக்கிளைகளிலே அமைத்து வாழ்கின்றன. சிலவகையானவை சின்னஞ்சிறு காய்ந்த மரக்குச்சிகளினாலும், சில காய்ந்த வைக்கோல், புற்களினாலும் கூடுகளை அமைக்கின்றன. சிலவகையானவை மரப்பொந்துகளிலே வாழ்கின்றன. சிலவகையானவை தம் பசைத்தன்மையான உமிழ்நீர் மூலம் கூடுகளை அமைப்பதாகவும் அறியக் கூடியதாக உள்ளது. அதாவது அவ்வவ் இனங்கள் தத்தம் ஐந்துவித அணுச்சேர்க்கை ஆற்றலுக்கும் பாதுகாப்பிற்கும் அமைய தம் ஆற்றலினை அதிகரித்து அவ் வினைப்பயன் காரணமாக ஐந்துவித அணுச்சேர்க்கைகளிலும் மாற்றம் ஏற்பட்டு அவையவை வெவ்வேறு வகையான கூடுகளை அமைக்கும் ஆற்றல்களைப் பெறுகின்றன. அதேவேளை சில பறவைகள் மரங்களில் பொந்துகளை அமைத்துவிட அப்பொந்துகளிற்



சென்று வேறு சில பறவைகள் வாழ்வதனையும் காணக்கூடியதாக உள்ளது. மரங்கொத்திப் பறவை எனக் கூறப்படும் ஓர் பறவை மரங்களில் பொந்துகளை ஏற்படுத்துவதையும் அப்பொந்துகளிலே கிளிகள், மைனாக்கள் வசித்து வருவதையும் நாம் காண்கின்றோம். இவ்வாறாக அவற்றின் ஆற்றல்கள் காணப்படுகின்றன.

கிளி என்ற பறவையினை எடுத்து நோக்குவோமாயின் இப்பறவையானது தனியே தாவரபட்சணியாகவே காணப்படுகின்றது. அத்துடன் சுத்தமான காற்றையே எப்பொழுதும் சுவாசிப்பதனாலும், ஒளி அணுக்களின் விகிதாசாரம் கூடுதலாகக் காணப்படுவதனாலும் இவற்றில் அறிவுப்பொருள், உண்மைப்பொருள் விகிதாசார வேறுபாடு ஏனைய பறவையினங்களை விட கூடுதலாகக் காணப்படுவதனால் இவை தம் அறிவாற்றல் மூலம் சூழல் மாறுபாட்டைப் புரிந்து வாழக்கூடியதான ஆற்றல் இதனிடம் காணப்படுவதை நாம் காண்கின்றோம். அதாவது ஒரு கிளியை அதன் வசிப்பிடத்திலிருந்து பிரித்து எமது வீட்டில் வளர்க்கும்போது எமது பேச்சினை அவதானித்து அவ்வாறாக தானும் முயற்சித்து பேசக் கூடியதான ஆற்றல் கிளிகளிடம் காணப்படுவதை நாம் அறிகின்றோம். இத்தகைய ஆற்றல் ஏனைய பறவைகளிடத்தில் காணப்படுவதில்லை. அவ்வாறாக அதன் ஐந்துவித அணுச்சேர்க்கை விகிதாசாரம் அமைந்துள்ளதே அதற்குக் காரணமாகும்.

பறவையினங்களிலே பென்குயின் என்ற பறவை பறக்கும் ஆற்றல் அற்றதாகும். இது இரு கால்களையும் சிறகுகளையும் கொண்டதாக இருந்த போதிலும் மனிதர்கள் போன்று நிமிர்ந்து நடந்து செல்கின்றது.

பறவையினங்களிலே காகம் உணவு உட்கொள்ளும் போது தன் இனத்தை அழைத்து உண்ணும் வழக்கம் உடையதாகக் காணப்படுவதை அவதானித்துள்ளோம். அவற்றுக்குக் காரணம் அப்பறவையின் ஐந்துவித அணுச்சேர்க்கைகள் விகிதாசாரத்தில் காற்றணுப்பொருளான அறிவும், ஒளிப்பொருளான உண்மையும் விகிதாசார அளவுகளில் கூடுதலாக அவ்வினப் பறவைகளில் காணப்படுதலேயாகும். ஒற்றுமைக்கு உதாரணமாக காக்கையினத்தை எடுத்துக் காட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான பறவையினங்கள் இரைதேடுவதற்கு கூட்டங் கூட்டமாகப் பறந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அப்பறவையினங்களிலே காணப்படுகின்ற ஐந்துவித அணுக்களின் விகிதாசாரத்தில் காற்று, ஒளி அணுக்களின் பங்கு கூடுதலாகக் காணப் படுதலே இதற்குக் காரணமாகும்.

பறவையினங்கள் தம் இனவிருத்தியினை முட்டையிடுவதன் மூலம் செய்து கொள்கின்றன. அதாவது அவ்வவ் இனங்களின் அனைத்து அம்சங்களும் அடங்கிய அணுக்கூறுள்ள முட்டைகளை உருவாக்கி அவற்றை அடைகாத்து குஞ்சுகளை உண்டாக்குகின்றன. ஆயினும் சில பறவைகள் முட்டையினை இட்டு அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் ஆற்றல் இல்லாதிருப்பதனையும் அறியக் கூடியதாக உள்ளது. அதற்குக் காரணம் அதன் ஐந்துவித அணுச்சேர்க்கை விகிதாசாரம் அவ்விதமாக அமைந்துள்ளமையேயாகும்.

குயில் என்று கூறப்படும் பறவையானது முட்டையிட்டு அடைகாத்து குஞ்சுபொரித்து வளர்ப்பதில்லை எனவும், இவை தம் முட்டைகளை காகக்கூடுகளில் இட்டுவிடுகின்றன எனவும், காகம் இம் முட்டைகளை அடைகாத்து குஞ்சுகளைப் பொரிப்பதாகவும் நாம் அறிந்துள்ளோம். குயில் என்ற பறவை மிகவும் சோம்பேறியான பறவையாகும். அதன் சோம்பேறித்தனம் காரணமாக உணவு உட்கொள்ளும் போது கூட தக்க முறையாக உண்பதில்லை. காய்களை அப்படியே முழுதாக விழுங்கிவிடும். கொத்தி சிறியதாக ஆக்கிக் கொஞ்சங் கொஞ்சமாக உண்பதற்கு அதன் சோம்பேறித்தனம் இடம் கொடுப்பதில்லை. எனவே தான் அது தனக்கென ஒரு கூட்டை அமைக்கவோ, முட்டையிட்டு அடைகாக்கவோ எண்ணுவதில்லை. காகத்தின் கூட்டினிலே முட்டையினை இட்டுவிட்டுச் செல்கின்றது. இதற்கு அதன் ஐந்துவித அணுக்சேர்க்கைகளின் விகிதாசாரமே காரணம் எனலாம்.

பறவையினங்களின் இனவிருத்தி முறையில் மாறுபட்ட வகையாக வெளவால் காணப்படுகின்றது. இது குட்டிகளை ஈன்று பாலூட்டி வளர்ப்பதாகவும் காணப்படுகின்றது. இவ்வாறாக அதன் ஐந்துவித அணுச் சேர்க்கை முறை அமைந்துள்ளது எனலாம்.

பெரும் பெரும் பறவையினங்களாக உருமாறிய கழுகுகள் போன்ற பெரும் பறவையினங்கள் சிறு சிறு பறவைகளை தமக்கு



இரையாக்கத் தலைப்பட்டன. இதன் காரணமாக அவற்றிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கு மரப்பொந்துகளில் வசித்துவந்த பறவையினங்கள் சில அவற்றிலிருந்து வெளியே பறந்து சென்று இரை தேடுவதில் உள்ள பாதுகாப்பற்ற தன்மையின் காரணமாக வேறு வழிகளில் தம்முடைய ஆற்றலறிவினை அதிகரிக்க அதிகரிக்க, அதன் வினைப்பயனால் ஐந்துவித அணுச் சேர்க்கைகளிலும் விகிதாசார மாற்றங்களேற்பட்டு, நான்கு கால்களையும், வாலினையும் உடைய அணில் போன்ற சிறு பிராணிகளாக உருமாற்றமடைந்தன. இவ்வாறு மாற்றமடைந்த அணில் மரத்திலிருந்து கீழே இறங்கி வரக் கூடியதாகவும், கிளைகளுக்குக் கிளை தாவி ஓடக்கூடியதாகவும், அதன் ஆற்றல்மூலம் தன் இயல்பினை அதிகரித்ததும், ஐந்தறிவு விலங்குகள் தோற்றம் பெற்றன.

இவ் அணிலின் வாழ்க்கை முறையும் பறவைகளின் வாழ்க்கை முறையும் பெரும்பாலும் ஒத்திருப்பதை நாம் காண்கின்றோம். அதாவது அணில் கூடுகட்டி வாழ்ந்து வருவதையும், பழவகைகளையும் தானியங்களையும் உண்டு வருவதையும், நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ் ஐந்தறிவு விலங்கினமான அணில் தன் ஆற்றலை, மேலும் தனது ஆயுளுக்கும், தேவைக்கும், பாதுகாப்புக்கும் என மென்மேலும் அதிகரிக்க அதிகரிக்க அவற்றின் ஐந்துவித அணுக்களிலும், மாற்றங்கள் ஏற்பட்டு அவ்வவ் இடங்களின் சுவாத்தியத்திற்கும் தன்மைகளுக்கும் ஏற்புடையதான விலங்குகளாக மாற்றமடைந்தன. பூனை, மரநாய், குரங்குகள் போன்றனவாகவும் தத்தம் வினைப்பயன் காரணமாக உருமாறின. இவ்வகையான விலங்குகள் பெரும்பாலும் மரங்களிலே வசித்து வருவதை நாம் காண்கின்றோம். அணில் தன் ஆற்றலை அதிகரித்து அவ் வினைப்பயன் காரணமாக மரநாய், பூனை, குரங்கு போன்றனவாக மாற்றமடைந்த வேளை ஐந்துவித அணுச் சேர்க்கை விகிதாசாரங்களிற்கேற்ப மரநாய், பூனை போன்றன மாமிச பட்சணிகளாகவும், குரங்கு தாவர பட்சணியாகவும் வாழத்தலைப் பட்டன.

அதேவேளை மரநாய் ஆனது தன் ஆற்றலை அதிகரித்து அவ் வினைப்பயன் காரணமாக அவ்வவ் இடங்களின் சுவாத்தியத்திற்

கும், பாதுகாப்பிற்கும் ஏற்றவாறாக ஓநாய், நரி, நாய் போன்றன வாகவும்,

பூனை தன் ஆற்றலினை அதிகரிக்க அதிகரிக்க அவ்வினைப் பயன் காரணமாக அவ்வவ் இடங்களின் சுவாத்தியத்திற்கும், பாதுகாப்பிற்கும் ஏற்றனவான புலி, சிங்கம் போன்றனவாகவும்,

குரங்கு தன் ஆற்றலினை அதிகரிக்க அதிகரிக்க சில இடங்களின் சூழ்நிலைக்கும், பாதுகாப்பிற்கும் ஏற்ப கருங்குரங்கு, செங்குரங்கு போன்ற வெவ்வேறுபட்ட இனங்களாகவும், சில இடங்களின் தன்மைக்கேற்ப கங்காரு, கரடி போன்றவைகளாகவும்,

கங்காரு இனம் தான் வாழ்ந்த சுற்றாடலில், தமது ஆற்றலினை அதிகரிக்க ஆடு, மான், மரை, மாடு போன்றனவாகவும், அவைதம் ஆற்றலின் அதிகரிப்பால் யானை போன்ற மிகப்பெரிய மிருகமாகவும், பரிணாம வளர்ச்சியினை அடைந்தன.

இவ்வாறாக விலங்குகள் தம் ஆற்றலினை அதிகரிக்க அவ்வினைப்பயன் காரணமாக, ஐந்துவித அணுக்கூறுகள் வெவ்வேறுபட்ட தன்மையினால் பல்வேறுவிதமான மிருக இனங்கள், தாவரபட்சணிகளாகவும், மாமிச பட்சணிகளாகவும், தாவர மாமிச பட்சணிகளாகவும் மாற்றமடைந்தன.

ஓநாய், நாய், நரி போன்றனவற்றின் உருவ அமைப்பில் ஒற்றுமை காணப்படினும், அவற்றின் ஐந்துவித அணுக்கூறுகளின் விகிதாசார வேறுபாடு காரணமாக வெவ்வேறுபட்ட இயல்புகளையுடையவையாகக் காணப்படுவதை நாம் அவதானிக்க முடிகின்றது. இவ்வாறாக பூனையின் உருவ அமைப்பையொத்த ஆனால் பெரிய மிருகமாகக் காணப்படுகின்ற புலி, சிங்கம் போன்ற மாமிசபட்சணிகள் ஐந்துவித அணுக்கூறுகளின் விகிதாசார மாற்றம் காரணமாக, வெவ்வேறுபட்ட இயல்புகளையுடையனவாக இருப்பதனை நாம் அவதானிக்க முடிகின்றது.

தாவரபட்சணியான குரங்கு தன் ஆற்றலினை அதிகரிக்க அதன் மூலம் வெவ்வேறுபட்ட சுவாத்தியங்களையுடைய வெவ்வேறு இடங்களில் ஓரிடத்தில் தன் பாதுகாப்பின் நிமித்தம் இருண்ட பகுதியில் மறைந்து வாழ்வதற்காக தன் நிறத்தை கருமையானதாகவும்,



பிறிதோரிடத்தில் செந்நிறமானதாகவும், தன் உடலின் நிறத்தை மாற்றியமைத்தும், சில சுவாத்தியங்களின் மாறுபட்ட தேவைகளுக்காக மரத்திலிருந்து இறங்கி நிலத்தில் வாழவேண்டியதான சூழ்நிலை உருவானபோது கங்காரு போன்ற விலங்கினமாகவும், மாறுபாடடைந்தன. இந்த விலங்கினம் தன் ஆற்றலின் !மூலம் வேகமாக ஓடக்கூடியதான பின்னங்கால்களை நீண்ட கால்களாகக் கொண்டுள்ளமையையும் குரங்கு தன் குட்டிகளை தன் மார்பிலே கொண்டு செல்வது போல் இக்கங்காரு தன் குட்டியினை தனது மார்பிலே காணப்படுகின்ற பையினிலே கொண்டு செல்லக்கூடியதான ஆற்றல் காணப்படுவதையும், நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

கரடியானது தன் ஆற்றலினை அதிகரிக்க பன்றியாகவும் உருமாற்றமடைந்தது. கரடி, பன்றி ஆகியன மாமிச பட்சணிகளாகவும், தாவர பட்சணிகளாகவும் காணப்படுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இவ் விலங்கினங்கள் தாவர பட்சணிகளாகவும், மாமிச பட்சணிகளாகவும், தாவரமாமிச பட்சணிகளாகவும் காணப்படுகின்றமைக்குக் காரணம் அவ்வவ் இனங்களின் ஐந்துவித அணுக்கூறுகளில் விகிதாசார மாற்றங்கள் அவ்வாறு அமைந்திருத்தலேயாகும். தாவரபட்சணிகள் பெரும்பாலானவை தீங்கு செய்யாதனவாகவும், மாமிசபட்சணிகள் தீங்கு விளைவிப்பனவாகவும், இருவகைப் பட்சணிகள் இரு செயற்பாடுகளும் உள்ளனவாகவும் காணப்படுவதனையும் நாம் அறியக் கூடியதாக உள்ளது.

சிங்கத்தினை எடுத்துக் கொண்டால் அது மிகவும் பயங்கரமான மிருகமாகக் காணப்படுவதனையும், அதேவேளை அது மாமிசபட்சணியாகவே விளங்குவதனையும் நாம் அறியக் கூடியதாக உள்ளது.

ஆடு, மாடு போன்ற விலங்கினங்களை எடுத்துக் கொண்டால் அவை தாவரபட்சணிகளாகவே காணப்படுகின்றன என்பதுடன் மிகவும் சாதுவானவைகளாகக் காணப்படுவதிலிருந்து தாவரபட்சணிகள் சாதுவான குண இயல்புகளையுடையன என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

அதேவேளை நாய், பன்றி போன்ற விலங்கினங்களை எடுத்துக் கொண்டால் அவை ஒருவேளை சாதுவானவைகளாகரும், ஒரு சமயம்

கொடியனவாகவும் காணப்படுவதையும் நாம் அறியக் கூடியதாக உள்ளது. அதாவது தனியே மாமிசபட்சணிகளிலும் தனியே தாவரபட்சணிகளிலும் காணப்படுகின்ற இயல்புகள் கலந்தனவாக இவை காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. அவற்றின் ஐந்துவித அணுக்கூறுகள் விகிதாசாரம் அவ்வாறானதாக அமைந்திருப்பதே அதற்குக் காரணமாகும்.

நாய், பூனை போன்றவற்றை வீடுகளில் வளர்க்கும்போது அவற்றின் ஐந்துவித அணுக்கூறுகளில் விகிதாசார மாற்றங்கள் ஏற்படுவதன் காரணமாக அவை அவ்வவ் வசிப்பிடங்களில் ஏற்புடையதான இயல்புகளை உருவாக்கி வளர்கின்றன. இவை காடுகளில் காணப்படும்போது அங்கு அவற்றின் வசிப்பிடத் தன்மைக்கு ஏற்றவாறாக சூழலுக்கு ஏற்ற இயல்புகளை அடைகின்றன. இவ்வாறாகவே ஆடு, மாடு போன்றவற்றின் இயல்புகளும் அவை வசிக்கின்ற இடத்திற்கு ஏற்புடையதாக ஐந்துவித அணுக்கூறுகள் விகிதாசாரம் மாறுபடுவதன் காரணமாக மாறுதலடைகின்றன.

விலங்கினங்கள் நான்கு கால்களையும், ஒரு வாலினையும் கொண்டவையாகக் காணப்படுகின்றன. அவ்வாறாக அவற்றின் ஐந்துவித அணுக்கூறுகள் அமைந்திருப்பதே அதற்குக் காரணமாகும். ஆயினும்கூட விலங்கினங்களில் மிகவும் பெரிய உருவமுடையதான யானையின் மூக்கு அதன் ஐந்துவித அணுக்கூறுகள் விகிதாசார மாற்றம் காரணமாக நீளமானதாக அமைந்துள்ளதுடன் அதனை ஒரு கை போன்றதாக பயன்படுத்தக் கூடியதாகவும் யானை பெற்றுள்ளது எனலாம்.

விலங்கினங்கள் தம் இனப்பெருக்கத்தினை குட்டிகளை ஈனுவதன் மூலம் செய்து கொள்கின்றன. இவை பாலினச்சேர்க்கை மூலம் கருவிலே சந்ததியினை உருவாக்கிப் பெறக்கூடியதாக அதன் ஐந்துவித அணுக்கூறுகள் அமைந்துள்ளன. ஈன்ற குட்டிகள் தாமாக உணவைத் தேடி உண்ணும்வரை இவை தம் குட்டிகளுக்குப் பாலூட்டி வளர்க்கின்றன. அதேவேளை மாமிசபட்சணிகளாகக் காணப்படுகின்ற விலங்கினங்கள் குண இயல்புகளில் பயங்கரமானவையாகவும், தாவரபட்சணிகளான விலங்கினங்கள் சாதுவானவையாகவும், மாமிசதாவரபட்சணிகளாக காணப்படுகின்ற விலங்கினங்கள் இருவகையான குண



வியல்புகளையும் கொண்டனவாகவும் இவைகளின் குணஇயல்புகளையும், உணவுப் பழக்கத்தையும் நோக்கும்போது தெளிவாகின்றது.

இவ்வாறாக இவ்விலங்கினங்கள் தம் ஆற்றலிலும், இயல்பிலும், உணவினிலும் பல்வேறுவகைப்பட்டனவாகக் காணப்படுகின்றதன் காரணம் அவற்றினது ஐந்துவித அணுச்சேர்க்கை விகிதாசார மாற்றங்களேயாகும்.

(தொடரும்)

★ சிறுவயதில் பயின்ற தமிழ்மொழியின் செய்நன்றியை மறவோம்.

★ ஞானம் வளர்த்த தமிழ்மொழி வளர உள்ளத்தை நெறிப்படுத்துவோம்.

★ இது எனக்கு, இது என் மகனுக்கு, இது என் மனைவிக்கு என்று உலகப் பற்றுடன் பொருள் சேர்ப்பவர்கள் மீண்டும் மீண்டும் பிறந்து, இறந்து, உழன்று சரீரரோகத்தை அனுபவிக்கிறார்கள். ஆத்ம தரிசிகளுக்கு அது இல்லை.

★ அறியாமை இழிந்ததன்று. அறிய மனமில்லாமல் இருப்பதுதான் மிக மிக இழிவு.

★ ஈஸ்வரன் நமக்கு ஐஸ்வரியத்தைக் கொடுக்கிறான். அதை வைத்துக் கொண்டு பரோபகாரம் செய்ய வேண்டும். தங்கள் தங்கள் சக்திக்கு ஏற்றபடி ஒவ்வொருவரும் இயன்ற தர்மத்தைச் செய்ய வேண்டும்.

★ செல்வத்திலோ, களியாட்டத்திலோ, புகழிலோ பற்றுடையவன் எவனும் மக்களின் மீது உண்மையான பற்றுடையவன் ஆகான்.

௮—

# பகுத்தறிவு மனிதனின் பரிணாம வளர்ச்சி

ஐந்தறிவு விலங்கினமாகிய குரங்கிலிருந்து அதன் வினைப்பயன் காரணமாக ஏற்பட்ட அணுச்சேர்க்கை விகிதாசார மாற்றத்தினால் பகுத்தறிவுள்ள உயிரினமாக வளர்ச்சியடைந்தவனே மனிதன் ஆவான்.

இப் பகுத்தறிவுள்ள மனிதன் தான் எவ்வாறு இந்த மனிதப் பிறப்பை அடைந்தான் என்பதையும் தனது இத்தகைய பிறப்பிற்கு காரணம் என்ன என்பதைப் பற்றியும் ஆராய்ந்து அறியும் வல்லமையுடையவனாவான். விஞ்ஞான வளர்ச்சியில் மேலோங்கி ஒரு கோளிலிருந்து ஒரு கோளுக்குச் செல்லும் வளர்ச்சியினைப் பெற்றுள்ளான். இவையெல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் என்ன என்பதை ஆராயும்போது அவனது கிரகிக்கும் ஆற்றல் (எண்ணம்) காரணமாக அணுச்சேர்க்கை விகிதாசாரம் மாறுபாடடைந்து விஞ்ஞான அறிவு வளர்ச்சியடைந்து அச்சிந்தனைக்குரிய அணுக்களின் விகிதாசாரம் அதிகரித்திருப்பதனை நாம் அறியலாம். சிந்தனையானது ஒரு விதமான உடலுழைப்புத்தான்; கஷ்டமான காரியந்தான் கஷ்டப்பட்டுத்தான் அவ் ஆற்றலை வளர்க்க முடியும். ஆற்றலின் வளர்ச்சியினாலேயே புதிய கண்டுபிடிப்புகளும் வளர்ச்சியும் ஏற்படுகின்றது.

சில சமயம் ஒரே விஷயத்தில் ஆழ்ந்து மூழ்கியிருப்பவன் பிற விஷயங்களையும், புதிய சிந்தனைகளையும் செய்ய முடியாதவனாயிருக்கின்றான். ஆனால் புதிய பாதை கண்டவர்களாலேயே இவ்வுலகம் முன்னேறியிருக்கிறது. புதிய நோக்கு நமக்குத் தேவை அது நம்மை வளர்க்க வளமாக்க உதவும். விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் பலவும் ஒரு துறையிலுள்ள உண்மைகள். மற்றோர் துறையில் இறங்கும்போது ஏற்படுவனதான் அவை புதிய கண்டுபிடிப்புக்களல்ல. சிந்தனை வளர்ச்சியின் வெளிப்பாடுகளேயாகும். சிந்தனை மனிதனால் மட்டுமே செய்யக்கூடிய ஒரு காரியமாகும். ஆனால் சிந்தனையின் ஆற்றலின் வலிமை மனிதருக்கு மனிதர் வேறுபட்டிருப்பதன் காரணம் அம் மனிதர்களது சிந்தனையின் வளர்ச்சிக்குரிய அணுச்சேர்க்கைகளின் விகிதாசார மாற்றங்களேயாகும்.



ஆரம்ப காலங்களிலே மனிதன் வாழ்ந்த நிலையினை இப்போது மனிதன் வாழுகின்ற நிலைமையினூடு தொடர்புபடுத்திப் பார்க்குமிடத்து மனிதனின் வளர்ச்சி எந்தளவிற்கு உயர்வடைந்துள்ளது என்பதனையும் விஞ்ஞான ரீதியிலும் ஆன்மீக ரீதியிலும் மனிதனின் வளர்ச்சிப்போக்கு எத்தன்மையினையுடையதாக இருக்கின்றது என்பதையும் நாம் அறியலாம். அன்று காடுகளிலே மரங்களிலும், கற்பாறைகளினாலான குகைகளிலும் இலைகுழைகளை உடையாகவும் தரித்து வாழ்ந்த மனிதன் இன்று விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக விதவிதமான உடைகளை அணியப் பழகிக் கொண்டுள்ளதுடன் மாடமாளிகைகளிலும் வாழ்ந்து வருகின்றான். அது ஒருபுறமிருக்க அன்று கல்லின்மீது கல்லைத்தட்டி, தீப்பொறியினை உண்டாக்கித் தனது அத்தருணத்திற்கான தேவையைப் பூர்த்தி செய்த மனிதன், இன்று ஒரு சிறு தீப்பொறியினால் எத்தனை ஆயிரக்கணக்கான மனிதர்களை மிகக் குறைந்த நேரத்தில் அழித்துவிட முடியும் என தனது சிந்தனையை ஓடவிட்டுள்ளான். இதனை அவன் தனது விஞ்ஞான வளர்ச்சி என பெருமைப்பட்டுக் கொள்கின்றான். இதன்மூலம் அம் மனிதன் எந்த இலக்கினை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றான் என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

ஐந்தறிவு படைத்த விலங்கினங்கள் தம்மினத்தைத் தாமே அழித்துக்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனவா? ஆனால் ஆறறிவு படைத்த மனிதனானவன் தன் இனத்தைத் தானே ஆகக் குறைந்த நேரத்தில் ஆகக்கூடுதல் எண்ணிக்கையில் அழித்து விடுவதனைப் பெருமைக்குரிய விடயமென எண்ணிக் கொள்கின்றான். விஞ்ஞான வளர்ச்சியில் முன்நோக்கிய மனிதன் ஆன்மீக ரீதியில் பின்தள்ளப்பட்டுள்ளான். நாம் பிறப்பது முதல் இறப்பது வரையான சகல செயற்பாடுகளையும் வளர்ச்சியினையும் அக்குவேறு ஆணிவேறாக ஆராய வல்லவனாக வளர்ச்சியடைந்துள்ள மனிதன் இறந்தபின் ஆன்மா எங்கு செல்கின்றது என்பதை அறியும் ஆற்றலை வளர்க்க விரும்பாமலிருக்கின்றான். ஏன்? மீண்டும் பிறக்க விரும்பும், வாழ விரும்பும் ஆசையினால்த்தான் அவ்வாறு செய்கின்றானா? அல்லது பிறப்பறுக்கின்ற எண்ணம் ஏற்படாது தொடர்ந்தும் இப்பூமியில் பிறந்து வாழ விரும்புவதால்தான் இயற்கையாகவே மனிதன் தன் இனத்தைத் தானே அழிக்கும் நடவடிக்கையில் அவனது ஆற்றல்

வளர்ச்சியடைகின்றதா? இவ்வாறான கேள்விகளைக் கொண்டதான சிந்தனைகளையுடையவனும் மனிதன்தான். ஆனால் அவ்வாறான மனிதனால் ஏன் உண்மையை உணர முடியவில்லை. பரிணாம வளர்ச்சிப் போக்கில் மாற்றங்களைக் கண்டுவந்த மனிதன் உண்மையை உணர்ந்தானாகில் இவ்வுலகில் எந்தவிதமான பிரச்சனைகளும் இருகக முடியாது. பிரச்சனைகளுக்குக் காரணம் மனிதன்தான். அதேவேளை செயற்பாட்டின் மூலம் பிரச்சனைகளை வெல்ல முடியாதவனாக இருப்பவனும் மனிதன்தான். மனிதன் ஏன் பல்வேறுவிதமான பிரச்சனைகளுக்கு ஆளாகின்றான் என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது ஆசை காரணமாகவே பெரும்பாலான பிரச்சனைகள் ஏற்படுவதை உணரலாம். மண்ணாசை, அதிகாரஆசை, பொன்னாசை இம்மூன்று விதமான ஆசைகளில் ஒன்றோ அல்லது பலவோ சேர்ந்தே அநேக பிரச்சனைகளுக்கு மனிதன் உட்பட்டிருப்பதனை நாம் காணலாம். இந்தப் பிரச்சனைகளை முற்றாக நீக்கிக் கொண்டு வாழ மனிதனால் முடிவதில்லை. ஆசை, இதன் மூலம் எத்தனையோ பிரச்சனைகள் என்பதைத் தெரிந்து கொண்ட மனிதன் ஆசையை எந்த வழியிலும் முற்றாக நீக்கிக்கொள்ள முடிவதில்லை. இந்த ஆசை எம்மைவிட்டு எப்போது நீங்கப்போகிறது என்பதைக் கண்டறிய மனிதன் முயல்வதாகத் தெரியவில்லை. கோளிலிருந்து கோளுக்குச் செல்வதற்கு விரும்புகின்ற மனிதன் விஞ்ஞான ரீதியிலே அத்தகைய அணுச்சேர்க்கை வளர்ச்சியினை அடைந்து மேலோங்கி நிற்கின்றான்.

ஒரு குழந்தை இத்தனையாவது நாளில் பிறக்கும் என்பதனை முன்கூட்டியே அறியும் ஆற்றலில் வளர்ச்சியடைந்துள்ள மனிதன் இத்தனையாவது நாளில் அவன் இறப்பான் என்பதைக் கண்டறியும் ஆற்றல் பெற்றவனாக வளர்ச்சியடைய முடியவில்லை. இதுபோன்றே உடலைவிட்டு உயிர் பிரிந்த பின்னர் ஆன்மா எங்கே செல்கின்றது என்பதனைக் கண்டறியும் வளர்ச்சியினை மனிதன் அடையவில்லை என்பதற்கும் இடையிலே நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் என நாம் நம்புகின்றோம்.

விலங்கினங்கள் பெரும்பாலானவை தமது இனத்தின் சகல இயல்புகளையும் ஒருங்கே ஒத்தனவாகவே காணப்படுகின்றன. ஆடு, மாடு,



நாய் போன்றவை தமது இயல்புகளில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறுபட்டனவாக பெரும்பாலும் காணப்படுவதில்லை. ஆனால் மனிதனானவன் தனக்குள் வேற்றுமை வளர்வதற்கான வகையிலே பல்வேறுவிதமான மொழிகள், உணவுப்பழக்கங்கள், கலாச்சாரங்கள் என வேறுபட்டு சொல்லொணாத் துன்பங்களுக்குள் சிக்கியுள்ளான். இவற்றிலிருந்து அவன் எவ்வாறு விடுதலை பெறுவான் என்பதனை ஆராயவேண்டியதும் மனிதனைச் சார்ந்த செயலேயாகும்.

நேரம் பொன்னானது என்று கூறுவார்கள் நேரத்தை மீதப்படுத்துவதற்காகவும், செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காகவும் மனிதன் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தினான். அவற்றின் மூலம் மீதப்படுத்தப்பட்ட நேரத்தை பெரும்பாலும் தீய சிந்தனையிலே செலவிட்டான். பொன்னான நேரத்தை இந்தவகையிலே மண்ணாக்கினான். ஆரம்பகாலத்திலே மனிதனுக்கு நேரம் மீதமாக இருக்கவில்லை அவன் முழுநாளும் நேரத்தை உடலுழைப்பிலேயே செலவிட்டான். இதன் காரணமாக அவனுக்கு தீய சிந்தனையிலே செலவிடக்கூடியதாக நேரம் இருக்கவில்லை. அதே போன்று அக்காலங்களிலே உலகிலே இன்று காணப்படுகின்ற குழப்பங்கள், பிரச்சனைகள் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மனிதனின் சிந்திக்கும் ஆற்றல் வளர வளர சகல துறைகளிலும் வளர்ச்சிகண்டு வருகின்ற மனிதன் பிரச்சனைகள், குழப்பங்கள், கருத்துமுரண்பாடுகள், மோதல்கள் போன்ற எல்லாவற்றிலும் வளர்ச்சிகண்டு வருகின்றான் என்பது யாவரும் அறிந்ததே ஆனாலும் மனிதனுக்கு மட்டுமே உரியதான பகுத்தறிவின் மூலம் நல்லவை, தீயவைகளை மனிதனால் பகுத்து ஆராய்ந்து அறியமுடிகின்றது. ஆனால் அவற்றை செம்மையான வழியில் நெறிப்படுத்த உள்ளம் பண்பட்டிருக்க வேண்டும். ஆயினும் ஆசை காரணமாக உள்ளத்தை பண்படுத்தமுடியாத நிலைமை காணப்படுகின்றது. அதேவேளை ஆசையை ஒழிக்க எத்தனைபேரால் முடியும். ஒரு தனிமனிதனால் ஆகக்கூடிய காரியமல்ல ஒவ்வொரு தனிமனிதனாலும் ஆகவேண்டிய காரியமே இதுவாகும். ஒவ்வொரு மனிதனும் தன்னல சிந்தனையிலிருந்து பொதுநல சிந்தனையாளனாக மாற வேண்டும். சிந்தனை மாற்றத்தினை நாம் ஏற்படுத்திக் கொள்ளும் வழிமுறைகளுக்குள் சுவாத்தியம், உணவுப்பழக்கங்கள் என்பனவும் உள்ளடங்குகின்றன. நல்ல

காற்று, நல்ல உணவு (மாமிசமல்லாத தாவர உணவுவகைகள்) நல்ல ஒளி என்பன எமது சிந்தனையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகளாகும். இந்த வழிமுறைகளை பின் பற்றுமிடத்து விரைவில் மனிதன் தூய சிந்தனையாளனாக உருவாகலாம் சுத்தமான காற்றணுக்கள் காணப்படும் சூழலில் வாழுகின்ற மனிதனின் சிந்தனை தூயதாக இருப்பதற்கான சாத்தியங்கள் பெரும்பாலும் கூடுதலாகவே காணப்படுகின்றது. சுத்தமான காற்றணு இருக்கக்கூடியதான நிலையினை ஏற்படுத்துவதில் தாவர வர்க்கங்களே முன்னணியில் திகழ்கின்றன. எனவே இவ்வாறாக மனிதனின் பரிணாம வளர்ச்சியில் இயற்கையளித்துள்ள செல்வங்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் ஒன்றுடனொன்று தொடர்புபட்டதாகக் காணப்படுவதையும் அதேவேளை மனிதனின் சிந்தனை வளர்ச்சிப் போக்கினைத் தீர்மானிப்பதில் ஐந்துவித அணுக்கூறுகளின் விகிதாசார மாற்றம் பெரும்பங்கு கொண்டுள்ளது என்பதையும் நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகின்றது.

மனிதனின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அவனது சிந்தனைதான் காரணமாகின்றது. சிந்தனை ஒருசக்தி ஒருமுகப்படுத்தப்படும் சிந்தனை சதா சிந்திக்கப்படும் ஆசை வலு படைத்த சக்தியாய் மாறுகின்றது. ஒரு மனிதன் எந்தச் சிஒதனையினால் ஆக்கிரமிக்கப்படுகின்றானோ அச் சிந்தனையின் சக்தி அவனைச் சுற்றிப் பரவி நிற்கின்றது. அந்த சிந்தனையின் சக்தியை அவன் செல்லுமிடங்களிலெல்லாம் பரப்புகிறான். அத்தகைய சூழ்நிலையில் ஒத்த சிந்தனையின் சக்தியானது வெளியில் உலவும் பிற சிந்தனைச் சக்திகளைக் கவருகின்றன. இதனால் ஒத்த உள்ளங்களின் சக்தி ஒருமித்த பெரும் சக்தியாக மாறுகிறது.

ஒரு கணம் சிந்தித்துப்பாருங்கள் நேற்றுவரை சாதாரண மனிதனாக நம்மிடையே உலவிய ஒருவன் இலட்சியம் என்னும் உயர் எண்ணத்தால் தலைவனாகி மாபெரும் சாதனைகளை நாட்டுக்காகச் செய்கிறான். இது எப்படி முடிகிறது? இது ஒரு தனிமனிதனின் சாதனை அல்ல.

ஒத்த உள்ளம் கொண்ட பல்லாயிரக்கணக்கான மக்களிடமிருந்து புறப்படும் ஓர் எண்ண சக்தி தலைவனின் எண்ணங்களுடன் இணைந்து தலைவனுக்கு மகத்தான வலிமையைக் கொடுக்கின்றன. மக்களுடைய



நல்லெண்ணமும் அபிமானமும் எண்ண சக்தியாக தலைவன் என்ற ஓரிடத்தில் சங்கமமாகின்றன. இப்படித்தான் நம்மை அறியாது பல சக்திகள் செயல்படுகின்றன. அதாவது சிந்தனையின் சக்தி அத்தகைய மகத்துவமுடையதாகும்.

வெற்றியை நாடிச் சிந்திக்கப்படும் எண்ணமானது வெற்றி பெற்றவர்களின் எண்ண சக்தியை – அறிவை அனுபவத்தை எப்படியோ அவரருகில் கொண்டுவந்து வைக்கிறது. வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற துடிப்பு நிறைந்த எண்ண சக்தி வாழ்வில் முன்னேறியவர்களை அவர்களருகில் இழுத்து வருகிறது. வாழ்வில் எல்லாம் பெற்று வளமாக வாழவேண்டும் என்று எண்ணப்படும் எண்ண சக்தி அதற்கேற்ப மனிதர்களையும் சூழ்நிலையையும் கொண்டுவந்து அமைத்துத் தருகிறது.

ஆகவே நம் மனம் என்னும் சோலையில் நல் எண்ண விதைகளை விதைப்போம். நம் வாழ்வையும் நாட்டு வாழ்வையும் எப்படி நல்லவிதமாக மாற்றுவது என்ற சாதனை எண்ணங்களை வளர்ப்போம்.

உ

## பாராட்டுக் கடிதம்

### மறைந்து நின்று சேவை செய்யும் மகத்தான மனிதர்

அன்பின் ஐயா!

''பணிபுரி பலனை எதிர்பாராதே'' என்ற வாக்கியத்தை எல்லோரும் தான் உச்சாடனம் செய்கிறார்கள். ஆனால் பலன் வேண்டாப் பணிபுரியும் மாந்தர் யார் உளர்? ஒருவர் கூட இலர் என்று அடித்துச் சொல்வதை தடுத்து நிறுத்துகிறது விநாயகர் தரும நிதியம். ஆமாம், விநாயகர் தரும நிதியத்தின் சேவை உண்மையிலேயே அளப்பரிய சேவை தான்; தன்னலமற்ற சேவை தான் பலன் வேண்டாப் பணிதான் அது.

பாராட்டுக் கடிதத்தொடர்...

பிறவிப் பெருங்கடலில் உழலும் மனிதரைக் காக்கும் கரம் நிதியம் அது. லௌகீக வாழ்விலும் சரி, ஆன்மீக வாழ்விலும் சரி மனிதரை நெறிப்படுத்தி வாழ வழிகாட்டும் ஸ்தாபனம் அது. வயிற்றுப் பசிக்கு அன்னமா? ஆன்மீக பசிக்கு ஞானமா? எல்லாமே அங்குதான் உண்டு அதனைத்தேடி நீர் போக வேண்டாம். தேவைப்பட்டோருக்கு அது தானாகவே தேடிவந்து சேருகிறதென்றால் அந்தச் சேவையை என்னவென்று வியம்புவது.

ஐயா; சேவை செய்யும் எத்தனையோ ஸ்தாபனங்களை, தனி மனிதர்களை நாம் பார்த்திருக்கிறோம். உண்மையிலேயே உங்கள் சேவைக்கு ஈடிணையாகாது. தமிழிலுள்ள அரும்பெரும் பொக்கிசங்களையெல்லாம் விலை கொடுத்து வாங்கிப் படித்துப் பயன்பெற வழியற்ற மக்களுக்குத் தாங்கள் செய்யும் சேவையை என்னென்று விளம்புவது? சுருக்கமாக இலகு தமிழில் இனிமையாக அறநூல்கள் தரும் கருத்துக்களை மக்களுக்கு அள்ளித் தருவது பலாப்பழத்தைப் பிரித்தெறிந்து அப்பழத்தின் அமுதான சுளைகளை மட்டும் வாயில் திணிப்பது போன்றுள்ளதல்லவா; அதுவும் இலவசமாக, அதிலும் இருக்கும் இடம்தேடி வருகிறதென்றால்...... அப்பப்பா இதுவல்லவா சேவையின் சிகரம்.

''சுயநலமற்ற பொதுநலமில்லை'' என்று சொல்வார்கள். அவர்கள் விநாயகர் தரும நிதியத்தையோ, உங்களையோ அறியாதவர்கள் என்றுதான் சொல்வோம். இல்லை, அவர்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. அதாவது, உங்கள் ஆத்ம திருப்திக்காக நீங்கள் செய்யும் இச்சேவை! அதுவும் ஒரு சுயநலம் என்று கொள்கிறார்களோ.

ஏகமனதாக எமது பொதுச்சபை அங்கத்தவர்கள் தீர்மானத்திற்கமைய இப்பாராட்டுப் பத்திரம் வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தலைவர்: இ. ஜெயபாலன்
செயலாளர்: வை. தங்கமயில்

வீரகத்தி விநாயகர் சனசமூக
நிலையம் – இமையாணன்.
22-09-1993

ஸ—

எமது வெளியீடுகளை
பின்வரும் விலாசங்களில்
பெற்றுக் கொள்ளலாம்.

★ பாஷையூர்புனிதஅந்தோனியார்
மக்கள் முன்னேற்ற ச. ச. நி.

★ சி. சி. வரதராசா
- கொழும்புத்துறை.

★ சிவ. ஆறுமுகசாமி
- கோணாவளை கிழக்கு,
கொக்குவில்.

★ வழி கலை இலக்கிய வட்டம்
- சுன்னாகம்.

★ அஷ்டலட்சுமி கலண்டர் நிறுவ.
- கண்டி றோட், கைதடி.

★ அன்னை மருந்தகம்
- பருத்தித்துறை.

★ S. K. சாமி — நெல்லியடி.

★ கலைச்சோலை
- வல்வெட்டித்துறை.

★ அபிராமி, மருந்தகம் - நீர்வேலி

★ சின்னையா ஸ்ரோர்ஸ்
- கொடிகாமம்.

★ சிவம் மருந்தகம்
- சாவகச்சேரி.

★ சூரியா பார்மசி - புத்தூர்.

★ ரி. வி. பாலா புத்தகசாலை
- இணுவில்.

---

இவ் வெளியீடு புலோலி மேற்கு விநாயகர் தரும நிதியத்திற்காக விநாயகர் தரும நிதிய அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.